கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

18.01.2015 - (18 தை, 2015 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 104 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /22 / NEWS / 2015

# ஞான ஒளி

ஞான ஒளி GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



"புனித யோசேவ்வாஸ் இறைவன்பால் கொண்ட பிளவுபடாத அன்பே அயலவர்களை நோக்கிய அன்புக்கு வித்திட்டது."

திருத்தந்தை பிரான்சிஸ்

எமது நாட்டின் புனிதர் புனித யோசேவ்வாஸ் 14.01.2015

# "இலங்கை நாட்டின் அமைதிக்கும் நீதிக்கும் ஒப்புரவிற்கும் பாரிய பங்களிப்பை வழங்குங்கள்"



14.01.2015 அன்று புதன்கிழமை எமது நாட்டின் முதல் புனிதரான புனித யோசேவ்வாசின் புனிதர் பட்ட நிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் காலி முகத்திடலில் பல இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார்.

அன்றைய முதல் கட்டமாக அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் புனிதராக உயர்த்தப்பட்டார். திருத்தந்தை அவர்கள் அதிகாரப்-பூர்வமாக மக்கள் முன்னிலையில் இதனை அறிவித்தார். "மண்ணுலகின் எல்லைகள் அனைத்தும் நம் கடவுள் அளிக்கும் மீட்பினைக் காணும்" (எசாயா 52:10) மேற்கூறப்பட்டது. இன்றைய முதல்வாசகத்தில் நாம் கேட்ட புகழ்ச்சி மிக்க தீர்க்கதரிசனமாகும். இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்திப் போதனை உலகின் எல்லைகள் எல்லாவற்றையும் சென்றடைவதை இறைவாக்கினர் எசாயா முன்னறிவிக்கிறார். இந்த தீர்க்கதரிசன முன்னறிவிப்பானது, மிகவும் மேன்மையான நற்செய்தியின் மறைபரப்பாளரான யோசவ்வாஸ் அவர்களின் புனிதர் நிலைக்கு உயர்த்தும் திருவிழாவின் வேளையில் ஒரு சிறப்பான அர்த்தத்தை கொடுக்கிறது. திருச்சபையின் வரலாற்றில் காணப்படும் எண்ணிலடங்கா ஏனைய மறைபரப்பாளர்களைப்போல புனித யோசவ்வாஸ் அவர்களும் "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். 28:19) என்ற உயிர்த்த இயேசுவின் கட்டளைக்கு பதிலுரைத்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

## "திருத்தந்தையே உங்களின் வருகை எமது நாட்டிற்கு ஆசீர்வாதமாக அமையட்டும்"

*இலங்கை ஜனநாயக்க சோசலிக்க குடியரசின் மேன்மைத்தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க விஜயத்தை முன்னிட்டு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடாத்திய வரவேற்பு நிகழ்வின் போது ஆற்றிய உரை (2015. 01. 13)*



அதிமேதகு திருத்தந்தையே, பாப்பரசரின் விசேட தூதுவர்களே, கர்தினால்மார்களே, ஏனைய பிரமுகர்களே, மதிப்புக்குரிய பிரதமரே, அமைச்சர்களே, பாராளுமன்ற உறுப்பினர்களே, வெளிநாட்டு தூதுவர்களே, சகோதர சகோதரிகளே,

பரிசுத்த பாப்பரசராகிய நீங்கள் மேற்கொண்ட இந்த அப்போஸ்தலிக்க விஜயத்தின் போது உங்களை எமது நாட்டுக்கு வரவேற்பதற்கு எனது அரசு மற்றும் மக்கள் சார்பில் பெற்ற இந்த வரலாற்று சிறப்புமிக்க மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்திலே, ஆசியாவில் அப்போஸ்தலிக்க விஜயத்தை மேற்கொண்டிருக்கும் நீங்கள் இலங்கைக்கு வந்திருப்பது எமக்கு பெரும் கௌரவத்தைத் தருகின்றது. திருத்தந்தையே, உங்களது விஜயம் என்னைப் பொறுத்தமட்டில் அதி உன்னதமானதோர் விஜ யமாக நான் கருதுகின்றேன். என்னை எனது நாட்டு மக்கள் ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்து ஒரு சில நாட்கள் நிறைவு செய்வதற்கு முன்பதாக உங்கள் அப்போஸ்தலிக்க...

தொடர்ச்சி 15ம் பக்கம்

## அமைதியும், நீதியும், சுபீட்சமும் நிறைந்த அரசாட்சி அமைய வாழ்த்துக்கின்றோம்



மேன்மைத்தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள்



அமைச்சர் ஜோன் அமரதுங்க அவர்கள்

அண்மையில் நடைபெற்ற 7வது ஜனாதிபதித் தேர்தலில் மக்களால், எமது ஜனநாயக சோசலிசக் குடியரசின் 6வது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மேன்மைத்தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களையும், எமது நாட்டின் பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. ரணில் விக்ரமசிங்க அவர்களையும், கிறிஸ்தவ மத விவகார அமைச்சு மற்றும் பொதுமக்கள் சமாதான அமைச்சராக தெரிவான திரு. ஜோன் அமரதுங்க அவர்களையும் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இவர்களின் புதிய அரசாட்சி மக்களுக்கு அமைதியும், நீதியும் சுபீட்சமும் நிறைந்த அரசாட்சியாக விளங்கவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

# உறவுகளே நீங்கள் எனக்களித்த
## அதி உன்னத வரவேற்பு



**சர்வ மதத் தலைவர்களுடனான சந்திப்பின் போது பரிசுத்த பாப்பரசர் நிகழ்த்திய உரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபம் 13.01.2015**

*அன்புக்குரிய நண்பர்களே,*

இலங்கையின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த நான்கு பெரும் சமய குழுக்களான பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவர் அனைவரையும், ஏனையவர்களையும் ஒன்றிணைத்த இந்த சந்திப்பில் பங்கெடுக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் நன்றி கூறுகிறேன். உங்களது பிரசன்னத்திற்கும், உங்களது வரவேற்பிற்கும் எனது நன்றிகள். ஜெபங்களை ஒப்புக்கொடுத்து ஆசீரையும் அளித்த அனைவருக்கும் விசேடமாக ஆயர் கிளீட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகைக்கும், வணக்கத்திற்குரிய விஜிதசிறி நியன்கொட தேரருக்கும் எனது நன்றிகள்.

எனக்கு முன்னிருந்த பாப்பரசர்களான 6ஆம் பவுல் ஆண்டகை மற்றும் 2ஆம் ஜோன் போல் ஆண்டகையினதும் வழியைப் பின்பற்றி நானும் இலங்கைக்கு வந்துள்ளேன். இதனூடாக இலங்கையின் மீது கத்தோலிக்கத் திருச்சபையின் பாரிய அன்பையும், கரிசனையையும் காட்டி நிற்கிறேன்.

இங்குள்ள கத்தோலிக்க சமூகத்தை தரிசிக்க கிடைத்தது ஒரு விசேட ஆசீரே ஆகும். அவர்களை கிறிஸ்தவ விசுவாசத்தில் பலப்படுத்தி, அவர்களோடு சேர்ந்து செபிக்கவும், அவர்களுடைய மகிழ்ச்சியையும், துன்பங்களையும் பகிர்ந்துக் கொள்ளவுமே இங்கு வந்துள்ளேன். மேலும், ஞானம், உண்மை மற்றும் தூய்மையை நோக்கிய பயணத்தில் எம்மோடு இணைந்துள்ள இப்பாரிய சமய பாரம்பரியங்களைக் கொண்ட உங்களோடு சேர்ந்திருப்பதும் அதே போன்றதொரு ஆசீர்வாதமேயாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் போது கத்தோலிக்க திருச்சபை ஏனைய மதங்கள் பால் அதன் ஆழமான மதிப்பை எடுத்துரைக்கிறது. திருச்சபையானது இம் மறைகளிலுள்ள உண்மையானதும், தூய்மையானதுமானவற்றை ஒருபோதும் ஒதுக்குவதில்லை. மாறாக அவற்றின் வாழ்வு, வழக்கம், படிப்பினைகள் மற்றும் கோட்பாடுகளைப் பற்றி உயர்ந்த மதிப்புக் கொண்டிருக்கிறது. (ஏனைய மதங்களுடனான உறவு, 2). ஆகவே, நானும், உங்கள் மீதும், உங்களது பாரம்பரியங்கள் மற்றும் நம்பிக்கைகள் மீதுமான திருச்சபையின் உண்மையான மரியாதையை மீள் உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

இந்த மரியாதையுடன் தான் கத்தோலிக்க திருச்சபை இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் நல்வாழ்விற்காக உங்களுடனும், நல்மனம் படைத்த அனைவருடனும் சேர்ந்து உழைக்க விரும்புகிறது. குடந்த வருடங்களில் மேற்கொண்ட பல்வேறு விதமான பல்சமய கிறிஸ்தவ சபைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை பலப்படுத்தும் விதமாக எனது இந்த விஜயம் அமையுமென நான் விரும்புகிறேன்.

போற்றுதற்குரிய இம் முயற்சிகள் உரையாடுதலுக்கான சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளதோடு, ஒருவர் மற்றவரை அறிந்து, புரிந்து, மதித்து நடக்கவும் இவை தேவைப்படுகின்றன. இவ்வாறான உரையாடல்கள் பலனளிக்க வேண்டுமாயின் எமது நம்பிக்கைகளை முழுமையாகவும், ஆணித்தரமாகவும் எடுத்துரைக்க வேண்டும். இதுவேதான் எமது அனுபவமாகவும் அமைகிறது. இவ்வாறான உரையாடல்கள் எமக்கு எமது நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் வழக்கங்கள் எவ்வாறு வேறுபட்டவை என்பதை தெளிவுபடுத்துகின்றன. எமது நம்பிக்கைகளை நாம் தெளிவாக எடுத்துரைக்கும்போது நாம் பொதுவாகக் கொள்பவைகளைப் பற்றிய தெளிவும் எமக்கு ஏற்படும். இவ்வாறு ஒருவரை ஒருவர் மதிக்கவும், சேர்ந்து செயற்படவும், நட்புறவிற்குமான புதிய பாதைகளும் திறக்கப்படும். பல்சமய உரையாடல் மற்றும் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான உறவுகளில் இவ்வாறான நேர்முறையான வளர்ச்சிகள் இலங்கையில் முக்கியத்துவம் றெுவதோடு காலத்தின் கட்டாயமுமாகின்றன. ஏனெனில் பல வருடங்களாக இந்நாட்டின் மக்கள் உள்நாட்டுப் பிரச்சினை மற்றும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்றைய தேவை என்னவெனில் ஆற்றுப்பதுத்தலும், ஒற்றுமையுமேயாகும். மேலதிக பிளவோ, பிரிவினையோ வல்ல. இந்நாட்டின் நன்மையை ஏன் முழு மனித குடும்பத்தின் நலநன விரும்பும் அனைவரினதும் அதிஉன்னத கடமைகளாகவே ஒற்றுமையை வளர்ப்பதும், காயங்களை ஆற்றுவதும் அமைகின்றன.

*தொடர்ச்சி 15ம் பக்கம்*

# தம்மாலங்கார தேரரினால் பரிசுத்த திருத்தந்தைக்கு கொடுக்கப்பட்ட வாழ்த்து செய்தி.

**குழந்தை மீதான தாயின் அன்பை பௌத்த மதத்திற்கோ, கிறிஸ்தவ மதத்திற்கோ மட்டுப்படுத்த முடியாது. அது தாய்க்கு உரிய அன்பு.**

***பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வமத மற்றும் அனைத்து கிறிஸ்தவ தலைவர்களின் சந்திப்பின் போது அதி வணக்கத்திற்குரிய இத்தாப்பான தம்மாலங்கார தேரரினால் பரிசுத்த திருத்தந்தைக்கு கொடுக்கப்பட்ட வாழ்த்து செய்தி.***

பரிசுத்த திருத்தந்தையே!

உம்மை கௌரவிக்கும் முகமாக இவ்வாழ்த்து செய்தியை வழங்குவதையிட்டு நான் பெருமிதம் கொள்கின்றேன்.

எம் இலங்கை நாடானது பழமைவாய்ந்ததும், பெருமிதம் கொள்ளக்கூடிய வரலாற்று சிறப்பையும் கலாசார பின்னணியையும் கொண்ட ஒரு நாடாகும். சர்வமத அடிப்படைகள் மற்றும் பல் இன மக்கள் வாழுகின்ற தன்மையை எம் நாடு பெற்றிருக்கின்றபடியால் உலக சமாதானத்திற்கும், சமயம் மற்றும் இனங்களுக்கிடையான சுமூகமான வாழ்விற்கும் பெருமிதமான பங்கை எம்மால் வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

புத்தபெருமான் கூறிய சில வார்த்தைகளை உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள விரும்புகின்றேன். "புனித எழுத்தாளர் வழியை காண்பிப்பார் ஆனால் உங்கள் கடமையினை நீங்களே நிறைவேற்ற வேண்டும்".

குழந்தை மீதான தாயின் அன்பை பௌத்த மதத்திற்கோ, கிறிஸ்தவ மதத்திற்கோ மட்டுப்படுத்த முடியாது. அது தாய்க்கு உரிய அன்பு. அதே போல் அன்பு, சுயகையளிப்பு, கருணை, சமாதானம் மற்றும் நட்புறவு போன்ற விழுமியங்களும் அல்லது வெறுப்பு, கோபம், பொறாமை, தற்பெருமை போன்ற தீமைகளும் ஒரு சமயத்தை சார்ந்தது அல்ல. இந்த விழுமியங்களும் தீமைகளும் முழு மனித குலத்திற்குமே உரியதாக்குகின்றன.

பரிசுத்த தந்தையே, இலங்கைக்கு நீங்கள் மேற்கொண்டுள்ள இவ்விஜயம் குறுகிய காலத்திற்கான விஜயமாக இருப்பினும் அது மகிழ்ச்சிகரமானதாகவும், பலன்தரக்கூடியதாகவும் அமைய வேண்டும் என பௌத்த மக்கள் அனைவர் சார்பாகவும் நான் வாழ்த்துகின்றேன்.

**அதி வணக்கத்திற்குரிய இத்தாப்பான தம்மாலங்கார தேரர்**

## "உலக வாழ் மக்களின் உள்ளங்களில் குடிகொண்ட மக்களின் நாயகனான திருத்தந்தை"

**2015ஆம் ஆண்டு தை மாதம் 13ம் திகதி பி.ப 6.15க்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சர்வமத தலைவர்களை சந்தித்த அமர்வில் மேதகு ஆயர் கிளிட்டஸ் C .பெரேரா ஆண்டகை நிகழ்த்திய வரவேற்பு உரை**



எமது திருத்தந்தையுடைய இலங்கைக்கான அப்போஸ்தலிக்க விஜயத்தை முன்னிட்டு நடாத்தப்படும் சர்வமத தலைவர்களுக்கான ஒன்றுகூடலுக்காக எமது அழைப்பினை ஏற்று இங்கு வருகைதந்திருக்கிற அனைத்து சமயத் தலைவர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் கௌரவத்தோடும் அன்புடனும் வரவேற்பதில் பெருமிதம் கொள்கின்றேன். அத்தோடு ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் என்ற வகையில் எனது தாழ்மையான, ஆழ்ந்த மதிப்பையும் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரின் சார்பிலும் கத்தோலிக்க திருச்சபையின் தலைமை ஆயனும், உலக நாயகனும் திருத்தந்தை அவர்களை வரவேற்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் எனக்கருதுகின்றேன்.

அதிவணக்கத்தற்குரிய திருத்தந்தையே, இலங்கை தாய்த் திருநாடு சர்வமத, சமூகம் வாழும் ஒரு நாடாக கணிப்பது உண்மைதான். பெரும்பான்மையர்கள் பௌத்த மதத்தை சார்ந்தவர்களாகவும் வாழ்கின்றர்கள். உங்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும், உங்களுடைய நல்லாசியைப் பெறுவதற்கும் இம்மாலை வேளையிலே உங்களை இச்சர்வமத தலைவர்களின் ஒன்றிப்பு அமர்விற்கு வரவேற்க கிடைத்தமை எம் அனைவருக்கும் பெருமைசேர்கிறது. அளவற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இது இலங்கை வரலாற்றிலே முக்கியமாக கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலே இடம் பிடிக்கும் உன்னதமானதோர் தருணமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அதிவணக்கத்தற்குரிய திருத்தந்தையே, நீங்கள் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்டு சொற்ப நாட்களிலேயே நீங்கள் உலக வாழ் மக்களின் உங்ளங்களில் குடிகொண்டு பல இலட்சக்காக்கான இன, மத, மொழி வேற்றுமையின்றி மக்களின் நாயகனாக இடம்பிடித்திருப்பது தெட்டத்தெளிவாக வெளிப்படும் ஓர் உண்மை. "கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்காது தன்னையே வெறுமையாக்கிய" (பிலிப்பியர் 2:7) எமது மீட்பரான இயேசுவைப்போல அதிகாரத்தோரணை களைக் களைந்து எளிமையான, தாழ்மையான ஊழியனாக நீங்கள் உலகை பிரமிக்க வைதிருக்கிறீர்கள். பல புனிதர்களின் பாதையில், குறிப்பாக உங்கள் பாதுகாவலராகிய புனித பிரான்சிஸ் அசிசி அவர்களின் வழிகாட்டலிலே வாழ்ந்து தற்பெருமையை தவிர்த்து ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்து தாழ்மை உள்ளம்கொண்டவராக உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டமை எங்களுக்கு உண்மையாகவே சவாலாக மாறியுள்ளது என்பதை பயம் திறந்து வெளிப்படையாக கூறி நிற்கின்றேன்.

இவ் வரலாற்று மிக்க தருணத்தில் நீங்கள் எம்மத்தியில் வீற்றிருப்பது எமது மனங்களை குளிர வைக்கும் ஒரு புத்துணர்வையும் அனுபவத்தையும் தருகின்றது. அத்தோடு இச்சந்தர்ப்பத்தில் எங்களோடு இணைந்திருக்கும் அதிவணக்கத்திற்குரிய கர்தினால்கள், திருத்தந்தையின் பிரதிநிதி மற்றும் கத்தோலிக்க, மெதடிஸ்ட, அங்கிலிக்கன் ஆயர்கள், தேசிய கிறிஸ்தவ சபை ஒன்றியத்தின் தலைமை தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் ஏனைய விருந்தினர்கள் அனைவரையும் கௌரவத்துடன் வரவேற்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். அத்தோடு விசேடமாக இங்கே வருகை தந்திருக்கும் பௌத்த தலைமை குருக்கள், சமயத் தலைவர்கள், சங்கநாயக்க குருக்கள்,

ஏனைய இந்து மகா சங்கத்தின் தலைமைக் குருக்கள் மற்றும் ஏனைய மதகுருமார்கள் பிரதிநிதிகள் இலங்கை ஜம்மியத்துள் உலாம சங்கத்தின் தலைவர்கள் ஏனைய இஸ்லாமிய தலைவர்கள் மற்றும் எமது அன்பின் உறவுகளை உளமார வாழ்த்தி கௌரவத்துடன் வரவேற்கின்றேன். எங்களுடைய அழைப்பினை ஏற்று எம்மோடு நீங்கள் இணைந்திருப்பது உண்மையிலேயே எமக்கு பெரும் மதிப்பையும், சக்தியையும் தருகின்றது. திருத்தந்தையின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க விஜயத்தை முன்னிட்டு நடாத்தப்படும் வரலாற்றுமிக்க அதி உன்னத ஒன்றுகூடலை மறுப்பின்றி ஏற்றுக்கொண்டு எம்மோடு இணைந்து கொண்டதையிட்டு திருச்சபையின் சார்பிலே எமது நன்றிகளை நவில்கின்றோம். இறையாசீர் உங்கள் அனைவரோடும் என்றும் இருப்பதாக நன்றி.

மேதகு ஆயர் கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகை (O.S.B)

ஞான ஒளி GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
18, தை மாதம், 2015 ஞாயிற்றுக்கிழமை.

## தமது அயலார் எந்த இனம் என்றாலும், மதம் என்றாலும், சமூக நிலையில் வேறுபட்டவர்கள் என்றாலும் அவரது அன்பு கலந்த அக்கறையை எடுத்துக்காட்டி மனிதரில் கடவுளைக் கண்டார்.

ஒரு மலருக்கு சூரிய ஒளி எவ்வளவு முக்கியமோ அந்தளவிற்கு மனித வாழ்க்கைக்கு கிறிஸ்து எனும் ஒளி தேவை. கிறிஸ்து எனும் ஒளி என்னில் பிரகாசித்தால் தான் நான் மற்றவருக்கு ஒளியாக இருக்க முடியும். அந்த வகையில் இந்திய மண்ணில் கோவை நகரில் பிறந்து இலங்கை மக்களுக்கு அன்பு தொண்டு செய்து ஒளியாக திகழ்ந்தவர்தான் உமது நாட்டின் புனிதராக உயர்த்தப்பட்டுள்ள யோசேவ்வாஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது இவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது எமது இலங்கை மண்ணிற்கு கிடைத்த மாபெரும் வெகுமதியென்றால் அது மிகையாகாது. அடிகளார் தமது அயலார் எந்த இனம் என்றாலும், மதம் என்றாலும் சமூக நிலையில் வேறுபட்டவர்கள் என்றாலும் அவரது அன்பு கலந்த அக்கறையை எடுத்துக்காட்டி மனிதரில் கடவுளைக் கண்டார். நாம் பறவைகளைப்போல் பறக்கக் கற்றுக்கொண்டோம். மீன்களைப்போல் நீந்தக் கற்றுக்கொண்டோம் ஆனால் சக மனிதர்களோடு உறவாடி மகிழும் எளிய வித்தையை இன்னுமே கற்றுக்கொள்ளவில்லை.

“மனிதனில் கடவுளைக் காணாதவர் மற்றெங்கும் காண முடியாது” (யோவா 10:31:42)

புனிதர் யோசேவ்வாஸ் அவர்கள் எல்லாக் குருக்கள், துறவறத்தாருக்கு எடுத்துக் காட்டான குருவாக திகழ்ந்தார். இறைவனுக்கும் பிறருக்கும் இடையில் உறவுப் பாலமாக இருந்தார். நாம் அனைவரும் செபிக்கும் மக்களாக, கிறிஸ்துவை அறிந்து நற்செய்திக்காக துன்புறும் மக்களாக மாறவேண்டும் என்பதே அவரது உயிர் மூச்சாக இருந்தது. எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பதல்ல, எவ்வளவு சிறப்பாக வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம் வாழ்க்கையை நான் வாழ்கிறேனா? அல்லது வெறுமனே நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கின்றேனா? வாழ்வின் மிகப்பெரிய இழப்பு மரணமல்ல, மாறாக நாம் உயிரோடு இருக்கும்போதே, இறைவன் எமக்குத் தந்த ஆற்றல்கள் திறமைகள் சிறப்புக்கள் அழிந்து போக அனுமதிக்கின்றோமே அதுதான் நாம் அடையும் மிகப்பெரிய இழப்பு. எமக்குள்ள திறமைகள் அனைத்தையும் பிறருக்கும் ஒளி தரும் விதத்தில் பயன்படுத்தி திருச்சபையில் ஆர்வத்தோடு பணி செய்வோம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

## இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் திருநாட்டிற்கு இறையாசி கிட்டவேண்டும். மேலும் அனைவரும் அமைதியும், சுபீட்சமும், பெறுவதின் ஊடாக அதன் ஒளி எங்கும் பரவிட நான் செபித்து நிற்கின்றேன்.



*பரிசுத்த திருத்தந்தை அவர்கள் 13.01.2015 அன்று செவ்வாய்க்கிழமை இலங்கை விஜயத்தை மேற்கொண்டு காலை 9.30 மணியளவில் இலங்கை சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். அவ்வேளையில் இலங்கை ஜனநாயக குடியரசின் தலைவர் மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களும், எமது கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்களும் ஏனைய ஆயர்களும், அரச பிரமுகர்களும் அவரை வரவேற்றனர். அந்நிகழ்வில் திருத்தந்தை ஆற்றிய உரை...*

மேதகு ஜனாதிபதி அவர்களே, அரச பிரமுகர்களே, அதிவணக்கத்திற்குரிய கர்தினால்களே, வெளிநாட்டு தூதுவர்களே, அன்புக்குரிய நண்பர்களே,

நீங்கள் எனக்களித்த உன்னத வரவேற்பையிட்டு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையில் மேற்கொண்ட இவ்விஜயத்தின் மூலம் நாம் ஒன்று சேர்ந்து செலுத்தவிருக்கும் இந்நாட்கள் வரும்வரை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இலங்கையின் எழில்மிகு இயற்கைச் சூழல் காரணமாக இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகின்றது. அதையும் தாண்டி முக்கியமான விடயம் என்னவெனில் இலங்கை வாழ் மக்களின் விருந்தோம்பல் தன்மை மற்றும் பலதரப்பட்ட கலாச்சார சமூக சமய சம்பிரதாயங்களை கொண்டிருப்பதன் மூலம் பிரபல்லியம் அடைந்திருக்கின்றது.

மேதகு ஜனாதிபதி அவர்களே, உங்களுடைய புதிய கடமைகள் தொடர்பாக எனது நல்லாசிகளை உங்களுக்கு தெரிவிக்கின்றேன். எங்களை வரவேற்க இங்கு வருகை தந்திருக்கும் அரச பிரமுகர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை கூறி நிற்கின்றேன். இந்நாட்டு மக்களின் சமூக வாழ்வை முன்னிட்டு அளப்பரிய சேவைகளை ஆற்றும் அதேவேளை இங்கு வருகை தந்திருக்கும் வணக்கத்திற்குரிய சர்வமத தலைவர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். அதேபோன்று இவ்விஜயத்தை இலகுபடுத்திய விசுவாசிகளுக்கும், பாடல்குழுவினர்களுக்கும் ஏனைய பணிகளை மேற்கொண்ட அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன். உங்கள் நல்லெண்ணம், கருணை மற்றும் விருந்தோம்பல் தொடர்பில் நான் உங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.


எனது இலங்கை அப்போஸ்தலிக்க பயணம் உண்மையிலேயே மேய்ப்புப்பணிசார் பயணமாக அமைந்திருக்கின்றது. கத்தோலிக்க திருச்சபையின் உலகளாவிய ஆயர் என்ற ரீதியில் இத்திருநாட்டின் கத்தோலிக்க மக்களை சந்திப்பதற்கும் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் அவர்களோடு இணைந்து செபிக்கவும் நான் உங்களோடு இணைந்திருக்கின்றேன். இவ்விஜயத்தின் உச்சக்கட்டமாக முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளை புனிதர் நிலைக்கு உயர்த்தி இன, மத, வேற்றுமைகளை அகற்றி கிறிஸ்தவ கருணை மற்றும் அன்பை அனைவரோடும் பகிர்ந்து மனித மாண்பை மதிக்கும் வழிமுறை தொடர்பாக அவர் எமக்களித்த வழிகாட்டல் அன்றுபோல் இன்றும் எமக்கு வழிகாட்டுகின்றது. ஏனெனில் இலங்கையர் அனைவருக்கும் திருச்சபையின் அன்பு மற்றும் கரிசனையினை வெளிப்படுத்தவும் இச்சமூகத்தில் மக்களுடைய இயல்பு வாழ்வுக்கு கத்தோலிக்க சமூகம் பங்குபெற அவர்களுக்கும் இருக்கும் விருப்பத்தினை உறுதிபடுத்தவும் எனது இவ்விஜயத்தின்போது எதிர்பார்க்கின்றேன்.

உலகில் சமூகங்கள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் போர்புரிவது உண்மையிலேயே கவலைக்கிடமாக அமைந்துள்ளது.

*தொடர்ச்சி 14ம் பக்கம்*

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



**“இலங்கை வாழ் அனைத்து சமய இன மத மொழி சார் மக்களும் இச்சிறிய அழகான தீவுக்கு நீங்கள் மேற்கொண்ட மேய்ப்புப்பணி பயணத்தின்போது உங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்”**

## அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதராக உயர்த்தும் திருப்பலியின் போது காலிமுகத்திடலில் வைத்து கர்தினால் ஆற்றிய நன்றியுரை 14.01.2015

அதிமேதகு திருத்தந்தையே,

இலங்கையின் குடிமக்களும், கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்களுமான நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனும், பிள்ளைகளுக்குரிய பாசத்துடனும் இன்று உங்களை எம் மத்தியில் வரவேற்கின்றோம். திருத்தந்தையே, நீங்கள் இலங்கை மண்ணில் காலடி வைத்த நேரத்திலிருந்து மரியாதையோடும் பணிவன்புடனும் உங்களை சூழ்ந்துள்ள எம் மக்களின் சாதராணமானதும் உண்மையானதுமான விசுவாசத்தை நீங்கள் அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருக்குமென உறுதியாக நம்புகின்றேன். உலகெங்குமுள்ள பல மில்லியன் கணக்கான உங்களுடைய அபிமானிகளுடன் இணைந்து இலங்கை வாழ் அனைத்து சமய இன மத மொழி சார் மக்களும் இச்சிறிய அழகான தீவுக்கு நீங்கள் மேற்கொள்ளும் மேய்பபுப்பணி பயணத்தின்போது உங்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

நீங்கள் எம் நாட்டுக்கு வந்திருக்கும் இப்பாக்கியத்தோடு எமக்கென்று ஒரு புனிதரையும் பரிசாகத் அளித்துள்ளீர்கள். புனித யோசேவ்வாஸ் அடிகளாார் என்கின்ற இப்பரிசு எமக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தருகின்றது. இலங்கைக்கென்று ஒரு புனிதர் இன்றுள்ளார். கோவா நகரின் பெருமை இலங்கைக்கு கடவுள் அளித்த விலைமதிப்பற்ற மாணிக்கம் ஆனது. ஆகவே நீங்கள் அளித்துள்ள இவ்விலைமதிப்பற்ற பரிசிற்காக உங்களுக்கு நன்றி நவில்கின்றோம். அவர் தம்முடையதாக்கிக் கொண்ட இந்நாட்டில் கத்தோலிக்கர் மிகவும் துன்புறுத்தப்பட்ட காலத்தில் அவர்களது விசுவாசத்தை காக்க அவர் செய்த பணி கடவுள் எம்மீது கொண்ட முடிவில்லாத அன்பின் காலத்தால் அழியாத காவியமாகத் திகழ்கிறது.

மெய்யாகவே கடவுள் இந்த புனித மனிதரை தம் தாய்நாட்டையும் மக்களையும் விட்டுவிட்டு ஆபிரகாமைப்போல தெரியாத இடத்திற்கு வந்து எமது மூதாதையரின் விசுவாசத்தை தன்னந்தனியாக பாடுபட்டுத் காத்து தூண்டியெழுப்பினார் என்றால் மிகையாகாது. விலைமதிப்பற்ற பரிசான தமது மகனை எமக்குத் தந்த கோவைத் திருச்சபைக்கும் எமது நன்றிகள். இன்று தமது முதுபெரும் தந்தையுடன் இணைந்து உயிர்த்துடிப்புள்ள கோவைத் திருச்சபையிலிருந்து வருகை தந்துள்ள அனைவரையும் நன்றியுணர்வுடன் வரவேற்கின்றோம். திருத்தந்தையே, உரோமபுரியின் புனித பேதுருவானவர் பசிலிக்கா திருத்தலத்தில் வைத்து கடந்த ஆண்டு (2014) மாசி மாதம் 8ந் திகதி இலங்கையைப் பற்றி இவ்வாறு சொன்னீர்கள். அதாவது “இயற்கை அழகு மற்றும் அதன் வடிவத்தின் அடிப்படையில் இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படுகிறது. அம்முத்து கண்ணீர்த்துளியின் வடிவத்தையும் பெறும்.” மெய்யாகவே முத்துக்கள் சிப்பிக்குள் உள்ள உயிரியால் சிந்தப்படும் கண்ணீரால் உருவாக்கப்படுகிறது. அதேபோன்று, கடந்த காலத்தில் உள்நாட்டுப் பிரச்சினையின் நிமித்தம் நிறையவே நாம் கண்ணீர் சிந்தினோம். அதனால் பலரும் பாதிக்கப்பட்டதோடு, எமது உடமைகளையும் இழக்க நேரிட்டது. துன்பகரமான கடந்த காலத்திலிருந்து மீளெளுந்து உண்மையான நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் மக்களின் அபிவிருத்தியையும் நோக்கிய பயணத்தில் நாம் ....

தொடர்ச்சி 15ம் பக்கம்.....

# கத்தோலிக்க திருச்சபையில் அர்ப்பண வாழ்வு 02

***‘இறைவனில் தோன்றி, அவரில் சங்கமமாகும் மானிட வாழ்வு விருத்தியடைவதும், வளர்வதும், வளம்பெறுவதும் குடும்ப அர்ப்பண வாழ்விலாகும்.’***

கத்தோலிக்க திருச்சபையில் அர்ப்பண வாழ்வுபற்றி சிந்திக்கவும் புதுப்பிக்கவும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கத்தோலிக்க விசுவாசிகளின் சமூகத்தை அழைத்துள்ளார்.

திருத்தந்தையின் அழைப்பில் முதல்நோக்காக இருப்பது கிறிஸ்தவ குடும்பங்களின் நிலை பற்றியும், அவற்றின் வளர்ச்சிபற்றியும் ஆழமாகத் தியானிப்பதாகும். கிறிஸ்தவ குடும்ப அர்ப்பண வாழ்வைப் புதுப்பிப்பதன் மூலம், கத்தோலிக்க விசுவாசிகளின் சமூகமாகிய திருச்சபையையே புதுப்பிக்கப்பட வேண்டும் என்பது திருத்தந்தையின் வாஞ்சையாகும். இங்கு கத்தோலிக்க குடும்ப அர்ப்பண வாழ்வு பற்றிய குறுஞ்சிந்தனை வளர்கிறது.

நித்திய குடும்ப அர்ப்பணம் சாத்தியமாகுமா?

2014. பெப்ரவரி. 14ல் காதலர்கள் தினத்தில் திருத்தந்தையின் தலைமையில் திருமணத்துக்கு நிச்சயிக்கப்பட்ட மணமக்களுக்கான ஒரு கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. குடும்ப அர்ப்பண வாழ்வு பற்றிய அவர்களின் கருத்துக்களைப் பகிரச் செய்வது அச்சந்திப்பின் நோக்கமாகும். அச்சந்திப்பில் பங்குகொண்டவர்களில் நிக்கோலா-மரி என்ற மணமக்கள் திருத்தந்தையிடம் “குடும்ப வாழ்வில் நித்திய அர்ப்பணம் இன்றைய காலகட்டத்தில் சாத்தியமானதாகுமா?” என்று கேட்டார்கள். “எங்கள் அனுதின அன்பை எங்களுக்குத் தாரும்” எனச்செபியுங்கள் என்று திருத்தந்தை அவர்களுக்குப் பதிலளித்தார். “இறைவனின் அன்புத்திட்டத்தில் குடும்பம் தோற்றம் பெறுகின்றது. இறைவனின் அன்பில் குடும்பம் அன்பின், நம்பிக்கையின், ஒத்துழைப்பின், ஒத்துணர்வின், சமஉதவியின், சுதந்திரத்தின், கருவறையாகி வளரவேண்டியுள்ளது“ எனத் திருத்தந்தை அவர்கள் தொடர்ந்து அவர்களுக்குக் கூறினார்.

திருத்தந்தையின் செய்தியில் கிறிஸ்தவ குடும்ப அர்ப்பணத்தில் நிலையான தன்மைக்கு அடிப்படையாக இருப்பது இறைவனின் அன்பில் நிலைத்திருப்பதும், அர்ப்பணம் என்பது சமத்துவ உறவில் வளரவேண்டியது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. “இன்று ஆழமான கலாச்சாரத் தாக்கங்களுக்கு ஆளாகியிருக்கும் ஏனைய பல சமூக அமைப்புகளுக்குள் குடும்பமும் ஒன்றாகும். இதன் விளைவாக, குடும்ப அர்ப்பண உறவு பலவீனமடைந்துள்ளது. திருமணம் மானிட உணர்வுகளை அவரவர் விருப்புக்கு ஏற்ப நிறைவு செய்யும் வழியாக நோக்கப்படுகின்றது. ஆனால் திருமணத்தின் மூலம் மானிட சமுதாயத்துக்குக் கிடைக்க வேண்டியதாக எதிர்பார்க்கப்படுபவை உயர்ந்தவையாகும். ஒரு குடும்பத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்கு மத்தியில் இணக்கத்திலும், இசைவிலும் ஒற்றுமையுடன் சொந்தம் என்ற உணர்வுடன் வாழக் கற்றுக்கொள்ள முடிகிறது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு தம் விசுவாசத்தைக் கையளிக்கும் இடமும் அதுதான்” என்பது திருத்தந்தையின் அறிவுரையாகும்.

குடும்ப அர்ப்பணம் இறையழைத்தல்

கிறிஸ்தவ குடும்ப அர்ப்பண வாழ்வை இறை அன்பில் வளர்க்க வேண்டும் என்பது இறை அழைத்தலாகும். இறைவனில் தோன்றி, அவரில் சங்கமமாகும் மானிட வாழ்வு விருத்தியடைவதும், வளர்வதும், வளம்பெறுவதும் குடும்ப அர்ப்பண வாழ்விலாகும். குடும்பம் மானிட வாழ்வின் இயற்கையான கற்கை நிறுவனமாகும். மானிட வாழ்வில் அடிப்படைப் பண்புகள், விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கைமுறைகள், அடிப்படை உரிமைகள், நம்பிக்கைகள், இறைவிசுவாசம் என பலதையும் கற்கும் பள்ளி குடும்பமாகும். குடும்பப் பள்ளியில் கற்பவை ஒருவரது வாழ்வுக்கு அத்திவாரமாகின்றன. வீடுகட்டும் போது உறுதியான நில அமைப்பும், அத்திவாரமும் அமைய வேண்டுமென்று ஆசிக்கின்றோம். நாம் கட்டிய வீட்டுக்குள் இல்லறம் வாழ்விக்கப்படுவதற்கு நிலையான அத்திவாரமிடப்பட வேண்டும். அதற்கு இறை அன்புக்கு திறந்த உள்ளத்துடன் வாழும் நிலையான அர்ப்பணம் வேண்டும். குடுப்பத்தின் மூலம் மானிட சமுதாயத்தை வாழ்விக்கும் இறைவனின் திட்டத்தில் நிபந்தனையின்றி பங்கு கொள்வதற்கு நிலையான குடும்ப அர்ப்பணம் செய்யும் உள்ளங்கள் வளரவேண்டும். குடும்ப அர்ப்பணம் செய்தவர்களுக்கு நிலைத்திருக்கும் உறுதியான உள்ளம் வேண்டும்.

நசரேத்தூர் குடும்பம் இறைவனின் வெளிப்பாடான வார்த்தை மனுவுருவான நிகழ்வு ஒரு குடும்பத்தில் இடம் பெற்றது. நசரேத்தூர் திருக்குடும்பம் இம்மறை நிகழ்வை வாழ்ந்து, அந்நற்செய்தியை பிறர் அறியச் செய்த உதார குடும்பமாகும். இடப்பெயர்வு, பாதுகாப்பின்மை, அச்சுறுத்தல், உளஇடர்பாடு, இவற்றிற்கு மத்தியில் இறைகுரலுக்குப் பணிவு கொண்டு நடந்து அனைத்துக் குடும்பங்களுக்கும் முன்னுதாரணமான குடும்பமாகும். இயேசு இறைவனுக்கு ஏற்புடையவராகவும், அயலவருக்கு உகந்தவராகவும் வளர சிறந்த பள்ளியான குடும்பமாகும். தாய் மரியாள் கண்டு வியந்து விசுவசித்த விடுதலையின் கடவுள் (லூக். 1:49) இயேசுவின் வாழ்வில் ஆழமான இறை அர்ப்பணத்துக்கு தூ ண்டுதலானார் (மத். 6:33, யோவா. 10: 17-18). தந்தை சூசையின் இறைவனுக்கு ஏற்புடைய, மனிதாபிமானமான, நேர்மையான செயல் (மத். 1: 18..) இயேசுவின் மனிதநேயப் பணிக்கு தூண்டுதலாயிற்று. முடிவாக இன்றும் கிறிஸ்தவ குடும்பங்கள் இம்மறை நிகழ்வை விசுவசிப்பதும், வாழ்வதும், அதனைப் பிறர் அறியச் செய்வதும் அவர்களது கடமையாகும். திருச்சபையின் நற்செய்திப் பணியில் கிறிஸ்தவ குடும்பங்கள் நேரடிப் பங்குகொள்ளுகின்றன. அதனை தாம் வாழும் சூழலில் ஈடுபாட்டுடன் செய்திட வேண்டிய முதன்மைப் பணியாளர்கள் அவர்களே. இதற்கு இன்றைய சூழலில் கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஒத்துழைப்பும், ஊக்குவிப்பும், பயிற்சியும் தேவைப்படுகின்றது. குடும்பங்களுக்குள் வளரும் முரண்பாடுகள், கருத்துக்கோவைகள், விழுமியங்கள், வாழ்க்கை முறைகள், எதிர்நோக்குகள், பின்புல தூண்டுதல்கள் என்பன நற்செய்தி விழுமியங்களுக்கு முரணானவையாக அமையும் சூழலில் அவர்கள் அர்ப்பணம் புதுப்பிக்கப்பட ஈடுபாடுள்ள மேய்ப்புப் பணி தேவைப்படுகிறது. கிறிஸ்தவ குடும்ப அர்ப்பண வாழ்வின் நிலைத்த தன்மையே, திருச்சபையில் ஏனைய அர்ப்பண நிலைகளிலும் நிலையான தன்மையைப் பாதுகாப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது. இதில் தனிநபர் விதிவிலக்குகள் இருக்கலாம். இன்று நித்திய அர்ப்பணத்தை கேள்வி கேட்பவர்கள் யார்? இவர்கள் கேள்வி எழுப்புவதற்கான காரணிகள் என்ன?

ஆக்கம் :
ஜெராட் டீ ரொசய்ரோ,
--அ. ம. தி.

# மடுத் திருத்தலத்தில் திருத்தந்தை பிரான்சிஸ்



14.01.2015 புதன்கிழமை மாலை 3.15 மணிக்கு ஹெலிகப்டரில் மடுத்திருத்தலத்திற்குச் சென்றார் திருத்தந்தை. மடு அன்னை ஆலயம் இலங்கையின் வடக்கே தமிழர் பகுதியாக மன்னார் மறைமாவட்டத்தின் மடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. அன்னை மரியா திருத்தல வரலாறு 400 வருட பழமை கொண்டதாகும்.

பாரிய போர் முழக்கத்தின் பின் இன, மத, பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றுகூடும் இடமாக மடுத் திருத்தலம் அமைந்திருக்கிறது. இன்றும் பல ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீரோடும், மகிழ்ச்சியோடும் திருத்தந்தையின் வருகைக்காக காத்திருந்தார்கள். திருத்தந்தையின் வருகையின் போது மக்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை திருத்தந்தையை வரவேற்று அழைத்துச் சென்றார். திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமியானுஸ் பிள்ளை அடிகளும் திருத்தந்தையை வரவேற்றார்.

திருத்தந்தை அவர்கள் வெண்புறா ஒன்றை பறக்கவிட்டு மக்களை பவனியூடாக சென்று தனது ஆசீரை வழங்கினார். பின் சிறிது செப வழிபாடு நடைபெற்று அன்னையின் ஆசீர்வாதம் மக்களுக்கு வழங்கப்பட்டது. இறுதியில் திருத்தல பரிபாலகர் திருத்தந்தைக்கு அன்பளிப்பாக மரத்தினால் செய்யப்பட்ட திரு அன்னையின் திருச்சுரூபத்தை கையளித்தார். திருத்தந்தையும் புன்னகையோடு ஒரு தந்தை தனது குழந்தையை தாங்கியிருப்பது போல அன்னையின் திருச்சுரூபத்தை கையில் ஏந்தியவண்ணம் காட்சிதந்தார். இறுதியில் அன்னையின் திருச்சுரூபத்திற்கு செபமாலையை அணிவித்து அம்மக்களிடமிருந்து விடைபெற்றார். அன்றைய நிகழ்வில் திருத்தந்தையின் உரை

## மன்னார் ஆயரால் மடுத்திருப்பதியில் வைத்து திருத்தந்தையை வரவேற்றல்

அதிமேதகு திருத்தந்தை அவர்களே,

இங்கு குழுமியிருக்கும் ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். நீங்கள் உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையிலான அமைதியின் தூதுவராக எம் நாடாம் இலங்கைக்கு வந்திருக்கின்றீர். நம் ஆண்டவரினதும், புனித பிரான்சிஸ் அசிசியினதும் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஏழைகள் மற்றும் துன்பப்படுவோர் மீதான போற்றுதற்குரிய உமது அன்பிற்காக உங்களுக்கு நன்றி நவில்கின்றோம்.

இந்நாட்டில் கிறிஸ்தவம் ஆரம்பித்த காலமான 1544களில் ஆசியாவிலேயே வேதசாட்சிய மரணம் இடம்பெற்ற முதல் இடமாக கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட இடமாக மன்னார் திகழ்கிறது. இங்கே கிட்டத்தட்ட அறுநூறிற்கும் மேற்பட்ட புதிய கிறிஸ்தவர்கள் தாம் புதிதாக பெற்றுக் கொண்ட விசுவாசத்திற்காக தமது இரத்த சாட்சியத்தை அளித்தார்கள். நாட்டின் வடபகுதியில் ஆட்சி செய்த யாழ்ப்பாண மன்னனுடைய ஆணைக்கு அமைந்தே இது இடம்பெற்றது. மன்னார் வேதசாட்சிகளின் இரத்தம் வடக்கிலும், ஏன் முழு நாட்டிலுமே விசுவாசத்தின் வித்தாக மாறியது.

அடர்ந்த கானகத்தின் மத்தியில் அமைந்துள்ள இத்திருத்தலத்தின் செழிப்பு மிக்க வரலாறு 400 ஆண்டுகளைக் கொண்டது. முதலில் மாந்தையில் குடிகொண்டிருந்த தேவ அன்னை ஒல்லாந்த ஆட்சியின் வேத கலாபனைக் காலத்திலேயே இவ்விடத்திற்கு மக்களால் கொண்டுவரப்பட்டார். திருச்செபமாலை அன்னையின் அத்திருத்தலம் எமது நாட்டு மக்களின் இன, மொழி, சமய வேற்றுமைகளைக் கடந்து அனைவரிலும் விசுவாசத்தையும், பக்தியை வளர்த்தெடுத்து பாதுகாப்பதில் இந்த நான்கு நூற்றாண்டுகளாக பாரியளவு பங்காற்றி வருகிறது.

இன்றும் இம் மரியன்னையின் திருத்தலமானது எமது மறைமாவட்டங்களில் குருத்துவ மற்றும் துறவறஅழைத்தல்களை ஊக்குவிக்கும் தலமாக அமைகின்றது. ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் 15ம் திகதி இடம் பெறும் பிரதான திருவிழாவான மரியன்னையின் விண்ணேற்புத் திருவிழாவன்று ஆறு இலட்சத்திற்கும் மேலாக பக்தர்கள் கூடி வரும் இடமாகவும் உள்ளது. மேலும், ஏனைய மாதாந்த திருவிழாக்களிலும், வார இறுதி நாட்களிலும் மக்கள் பெருவாரியாக திரண்டு வரும் திருத்தலமாகும். திருத்தந்தையே, இத்திருத்தலத்தில் உமது பிரசன்னம் இத்திருத்தலத்திற்கும், அதன் பக்தர்கள் அனைவருக்கும் விசேட தனிப்பட்ட ஆசீரைக் கொண்டு வருவதாக அமைகிறது.

திருத்தந்தையே, உங்களது இவ்விஜயமும், உங்களது செபங்களும் எமது தாய்நாட்டுக்கு அமைதியையும், சுபீட்சத்தையும் கொண்டு வருவதாக. நாங்கள் எல்லோரும் மிகுந்த பக்தி வணக்கத்துடன் எந்நாளும் உங்களுக்காக செபிப்பதோடு, எமது பிள்ளைகளுக்குரிய கீழ்ப்படிவையும், மரியாதையையும், அன்பையும் உங்களுக்கு செலுத்தும் ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைவதாக. திருச்சபையையும், முழு உலகையும் நீங்கள் வழிநடத்தி உற்சாகப்படுத்த ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்னை மரியா நீங்கள் மேற்கொள்ளும் எல்லா மேய்ப்புப் பணிகளிலும் உங்களோடு கூட இருந்திடுவாராக!

## மருதமடு அன்னை திருத்தலத்தில் திருத்தந்தையின் உரை

## 2015.01.14

கிறிஸ்துவுக்குள் பிரியமான எனது அன்புச் சகோதர சகோரதிகளே,

நாம் அனைவரும் எமது அன்னையின் இல்லத்தில் ஒன்று கூடியிருக்கின்றோம். அன்னை எங்களை தனது இல்லத்தில் வரவேற்கின்றார். மடுதமடு அன்னையின் திருத்தலத்தில் ஒன்றுகூடும் விசுவாசிகளும் இதை தனது இல்லமாக உணரமுடியும். இங்கு மரியன்னை தனது மகனிடம் எங்களை அழைத்துச் செல்கின்றார். சிங்களவர்கள், தமிழர்கள் இணைந்து அனைத்து இலங்கை வாழ் மக்களும் ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்களாக இங்கு ஒன்றுகூடுகின்றனர். அவர்கள் மரியன்னையிடம் அவர்களுடைய மகிழ்ச்சி, வடுக்கள், எதிர்பார்ப்புக்கள் மற்றும் தேவைகளை முன்வைக்கின்றனர். அன்னையின் இல்லம் தங்களுக்கு பாதுகாப்பானதோர் இல்லமாக கருதுகின்றனர். இறைவன் தம் அருகில் இருப்பதை உணர்ந்து, இறைவனுடைய அன்பு, கனிவு நிறைந்த கருணை மற்றும் மன்னித்தலை உணருகின்றனர்.

இன்று இங்கு ஒன்றுகூடியிருக்கும் குடும்பங்கள் நீண்டகால முரண்பாடு காரணமாக, இலங்கை அன்னையின் இதயத்தைக்கிழித்த பல இன்னல்களுக்கு முகம் கொடுத்தவர்களாக உள்ளனர். வடக்கிலும், தெற்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வன்முறைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இலங்கை வாழ் எவராலும் இவ்விடத்தின் துன்பம் நிறைந்த சம்பவங்களை, அந்தந்த இடங்களை கால வரையறைகளை மறக்க முடியாது. இப்புனிதமான மருதமடு அன்னையின் திருச்சுரூபத்தினை இலங்கையின் ஆரம்பக் கிறிஸ்தவர்கள் இவ்விடத்திற்கு எடுத்து வந்து வைத்தாலும், அன்னையின் திருச்சுரூபம் கூட இம்மருதமடு திருத்தலத்திலிருந்து வெளியேற நேரிட்டது. இருப்பினும் மருதமடு அன்னை என்றுமே உறுதுணையாக உங்களோடு வீற்றிருக்கின்றாள். அனைத்து வீடுகளிலும் அவள்தான் அன்னை. வடுக்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலேயும், ஒப்புரவு, சக வாழ்வை மீளப்பெறுவதற்கு முயற்சிற்கும் ஒவ்வொருவரிலும் அவள் வீற்றிருக்கின்றாள். தன்னுடைய மகன் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவைப்பயணத்தின் இறுதிவரை பின்தொடர்ந்தது போன்று மரியன்னை திருநாட்டில் வாழும் தன்னுடைய குழந்தைகளை மறப்பதில்லை. கைவிடுவதில்லை. துன்புறும் குழந்தைகளை கைவிடாது அவர்களின் சார்பாக தொடர்ந்து பரிந்து பேசிக்கொண்டிருக்கின்றார்.

ஆகையால் இன்றைய நாளில் நாங்கள் அவரது பரிந்துபேசுதலின் தொடர்பில் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். பலதரப்பட்ட வடுக்கள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் அழிவுகள் மத்தியில் அவர் எங்களை இறைமகன் இயேசுகிறிஸ்துவிடம் ஒப்புரவாக்க செயற்பட்டதையிட்டும் நாம் அவருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இறைவனுடைய வல்லமையால் மாத்திரம் திறந்த வடுக்களை குணப்படுத்தி உடைந்த உள்ளங்களுக்கு அமைதியை ஏற்படுத்தமுடியும். இருப்பினும் நாம் மரியன்னையிடம் இறைவனுடைய





கருணையை பெறுவதற்கு பரிந்துபேசவென வேண்டி நிற்பது அவசியம். இம்மண்ணில் நாம் அறியும் பாவம் மற்றும் தீய செயல்களை பிரித்தெடுக்க தேவையான வரம்கேட்டு மன்றாடுவோம்.

அதனை செய்வது சுலபமான விடயமல்ல. திருச்சிலுவையின் ஒளி மத்தியில் தீமை எங்களோடு வாழ்ந்து எங்களில் ஒரு அங்கம் வகித்து இருப்பனை உண்மையான பச்சாத்தாபம் மற்றும் உளமற்றத்தினூடாக நாம் புரிந்துகொள்வோமாயின் இதை எம்மால் செய்ய முடியும். அதனூடாக மாத்திரமே ஒவ்வொருவர் மத்தியிலும் உண்மையான பச்சாத்தாபம் மன்னிப்பு பெறுதல் மற்றும் மன்னிப்பு வழங்கல், சமாதானத்தின் தேடல் தொடர்பில் இங்கு வீற்றிருக்கும் மரியன்னை சதாகாலமும் எங்களுக்கு ஒரு துணையாக எங்களை ஊக்குவித்து வழிகாட்டி தலைமைத்துவமும் வழங்கி நிற்கின்றாள். அவள் தன்னுடைய ஏக மகனான இயேசுக்கிறிஸ்துவின் கொலையாளிகளுக்கு திருச்சிலுவை அடிவாரத்தில் இருந்து மன்னிப்பு அளித்து உயிர் துறந்த தனது மகனின் உடலை தன் இரு கரங்களால் பற்றியணைத்துக் கொண்டாள். ஆகையால் தற்போது இலங்கை வாழ் மக்கள் அதிஉன்னத ஒப்புரவிற்கு தேவையான இறைவனுடைய மன்னிப்பு கருணை என்னும் ஒளியினால் அனைவருக்கும் உண்மையான ஆறுதலையும், குணப்படுத்தலையும் அனுபவிப்பதற்கான வழிகாட்டல் தேவையாக உள்ளது.

இறுதியாக இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி பேசும் சமூக மக்களாக நாமனைவரும் மரியன்னையோடு இணைந்து அவருடைய பரிந்துபேசுதல் வழியாக அழிந்து போயிருக்கும் ஒற்றுமையை மீளக்கட்டியெழுப்புமாறு மனந்திறந்து மன்றாடுவோம். போர் நிறைவுற்றதும் மரியன்னையின் திருச்சுரூபம் மடுத்திலத்திற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டதுடன் இலங்கை வாழ் பிள்ளைகளாக இறைவனுடைய இல்லத்தை நோக்கிய ஒப்புரவு மற்றும் சகோதரத்துவத்துடனான ஆவியின் கொடைகளை நிரம்பப்பெற்று எங்கள் மத்தியில் வீற்றிருக்க இறைவனைப் பார்த்து இறைஞ்சி மன்றாடுவோம். கிறிஸ்து இயேசுவில் பிரியாமான சகோதர சகோதரிகளே உங்களோடு இணைந்து மரியன்னையின் இல்லத்தில் நிற்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நாம் நம் ஒவ்வொருவருக்காகவும் மன்றாடுவோம். இவ்வனைத்துக்கும் மத்தியில் இத்திருத்தலமானது சதா காலமும் வேண்டுதல்களின் இல்லமாக விண்ணுலகின் ஒப்புரவு மற்றும் சமாதானத்தின் பீடமாக அமைய இறைவனிடம் பிரார்த்திப்போம். மருதமடு அன்னையின் பரிந்து பேசுதலினூடாக இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஒப்புரவு கொண்டு நீதி மற்றும் சமாதானத்தில் நிரம்பிய ஒரு சுபீட்சமான எதிர்காலம் அன்பு நிறைந்த இத்திரு நாட்டில் வாழும் அனைத்து இறைவனுடைய குழந்தைகளுக்கு உரித்தாகுக. ஆமென்.




## வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி

### கடவுளுடைய கட்டளைகள் பத்து

**ஐந்தாவது : “கொலை செய்யாதிருப்பாயாக”**

1. சண்டை, சச்சரவு, ஏசிப் பேசித் திட்டுதல், கொலை செய்தல், கருக்கலைப்பு, கருணைக் கொலை, தற்கொலை போன்ற பொல்லாங்குகளைச் செய்யாமலும், அவைகளைச் செய்ய முதலாய் ஆசைப்படாமலுமிருக்க வேண்டும்.

2. பிறருக்கு துர்மாதிரிகை காண்பித்தல் துர்புத்தி சொல்லுதல், பகை, வர்மம் மற்றும் பழிவாங்குதல் போன்ற தீமைகளை விலக்கி நடத்தல் வேண்டும்.

3. பிறர் செய்யும் குற்றங்களை நல்ல மனதோடு பொறுத்துக் கொள்கிறதும், நமது கடமையே. அப்படிப் பொறுத்துக் கொள்ளாமல் மனதுக்குள்ளே பகை வர்மம் வைத்துக் கொண்டு, ஒருபோதும் பாவசங்கீர்த்தனம் பண்ணக் கூடாது.

4. நமக்குச் சொந்தமான பொருள் நியாயமாய்க் கிடைக்கும்படி நாம் வாதம் பண்ணலாம். ஆனால் அது சமாதானத்துக்கும், பேச்சுவார்த்தைக்கும் தடையாய் இருக்கக்கூடாது.

5. அதிக பொல்லாப்பு நேரிடும் எனும் கருதும்பட்சத்தில் எதிராளியோடு பேசாமல் இருந்தாலும், திரும்ப சமாதானம் உண்டாவதற்கு வேண்டிய முயற்சி செய்ய வேண்டும்.

“எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பது போல, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

**ஆறாவது : “மோகபாவம் செய்யாதிருப்பாயாக”**
**ஒன்பதாவது : “பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக”**

1. இவ்விரண்டு கற்பனைகளாலும், மோகபாவமும், அதற்கு ஏதுவான சிற்றின்ப நாட்டங்கள், செயற்பாடுகள், பேச்சுவார்த்தை, நினைவு, ஆசை, பார்வை, தீயநட்பு, முதலிய பாவங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன.

2. மேலும், கெட்ட நாடகங்கள், ஆடல் பாடல்கள், திரைப்படங்கள் மற்றும் ஆபாசப் படங்களைப் பார்க்கிறதும், கெட்ட புத்தகங்களை வாசிக்கிறதும் பாவமாகும். இவை நம் மனதைக் கெடுத்து, கேட்டுக்குள்ளாக்கி, மோகபாவம் செய்யத் தூண்டுகின்றன. வெளிச் செயற்பாடுகளாலே மோகபாவம் கட்டிக் கொள்ளாமல் போனாலும், கெட்ட நினைவுக்கும், ஆசைக்கும் மனது பொருந்தி சம்பாதிக்கும் போதெல்லாம் சாவான பாவத்தைக் கட்டிக் கொள்கின்றோம்.

3. தனக்குத் தானே சிற்றின்பதை ஏற்படுத்தல், ஓரினச் சேர்க்கைகள், திருமணத்திற்கு முன்னரான பாலியல் சேட்டைகள், திருமணத்திற்கு புறம்பான செயற்பாடுகள், பிறர் தாரத்தை தன்வசப்படுத்துதல், திருச்சபையின் விலக்கு இன்றி மறுமணம் முடித்தல், திருமணமின்றி கூடிவாழுதல், சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம் மேற்கொள்ளுதல் போன்றன சாவான பாவங்களாகும்.

**வினாக்கள் :**

1. உயிர் கடவுளுக்குச் சொந்தம். ஆனாலும் இன்றைய உலகில் மனிதன் உயிரை மதித்துப் பேணாத சந்தர்ப்பங்களைப் பட்டியலிடுக?

2. உடல் தூய ஆவியானவர் குடிகொள்ளும் ஆலயம், மேலும் உடல் தூய்மையை பாதுகாக்க உள்ளத் தூய்மை மிக முக்கியாமானது. எனினும் உடலை ஒரு வியாபாரப் பொருளாக்கும் இன்றைய நிலையைப் பற்றி விளக்குக?

தொடரும்....

**விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
*வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி*
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு – 08.

## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

# கிறிஸ்து உயிர்வாழ்கிறார்.



ஒரு நாள் இந்து சகோதரன் என்னைச் சந்தித்தான். “நான் எனது தந்தைக்கு எதிராக குற்றம் செய்துவிட்டேன். எனது தந்தை இறந்துவிட்டார். ஆனால் குற்ற உணர்வு என்னை வாட்டுகின்றது. கத்தோலிக்க மதத்தில் பாவ மன்னிப்புக் கொடுக்கிறார்களாம். நானும் சென்று பாவமன்னிப்புப் பெற முடியுமா?” என்று என்னிடம் கேட்டான். “இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால், நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை” என்று திருத்தூதர் பணி 4:12ல் கூறப்பட்டுள்ளது.

இறைவன் இயேசு என்ற பெயரில் தெய்வீக வல்லமை மகிமையில் இருந்து வெறுமையாக்கி மனிதனானர். அவர் எமக்காகப் பாடுபட்டு மரித்து அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அவர் உயிர் உள்ளவர் மட்டுமல்ல மகிமை பெற்றவராகவும் இருக்கிறார். மகிமை பெற்றார் என்பது என்ன? அவரது சரீரம், மனம் எல்லாம் தெய்வீக வல்லமையால் நிரப்பப்பட்டது. அதனால் உயிர்த்த கிறிஸ்துவால் உயிர்த்த சரீரத்தோடு சகல படைப்புக்கள் மத்தியிலும் வீற்றிருக்க முடிகிறது. யாவற்றையும் ஊடுருவிப் பார்க்கவும், பேசவும் கூடிய தன்மை அவருக்குண்டு, உலகிலுள்ள எல்லா மனிதரோடும் ஒரே நேரத்தில் தொடர்பு கொள்ளக்கூடிய தன்மை அவரிலுண்டு.

கிறிஸ்தவம் என்பது என்ன? கிறிஸ்தவம் என்பது உயிர்வாழும் கிறிஸ்துவே. கிறிஸ்தவன் என்பவன் யார்? உயிர்வாழும் கிறிஸ்துவைச் சத்தித்தவன். அவரோடு தொடர்பு கொள்பவனே. சவுல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி வந்தார். அந்த நோக்கத்துக்காகத் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தார். அவர் இயேசுநாதரோடு ஏனைய சீடர்களைப்போல் வாழவில்லை. அவரது பிரசங்கத்தையும் கேட்கவில்லை. இன்று அவரைப் பவுல் என்று அழைக்கின்றோம். அதாவது புனித சின்னப்பர் என்கின்றோம். உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தபின் கிறிஸ்துவைப் பற்றிப் போதிக்க தனது வாழ்வை அர்ப்பணித்தார். கிறிஸ்துநாதரின் ஏனைய சீடர்கள் யூத மக்களுக்குக் கிறிஸ்துவை அறிமுகப்படுத்தினர். ஆனால் சின்னப்பரோ யூதரல்லாத பிற சமயத்தவர்களுக்கு இயேசுவைப் பற்றிப் போதித்தார். புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களில் 13 புத்தகங்களை அவரே எழுதினார். அவரது வாழ்வை மூன்றாகப் பிரிக்க முடியும்.

1. கிறிஸ்துநாதரைச் சந்திக்குமுன்...
2. உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தல்
3. கிறிஸ்து நாதரைச் சந்தித்தபின்

நாமும் உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்தால் எமது வாழ்வையும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கமுடியும். சின்னப்பர் கிறிஸ்துநாதரைச் சந்தித்தது மட்டுமல்ல. நிரந்தரமும் அவரோடு உறவு கொண்டவர் என்பதே முக்கியம். இன்று பலர் கிறிஸ்துவைச் சந்திக்கும் அனுபவத்துக்கு வருகிறார்கள். அப்பொழுது அவர்களது வாழ்வு மாறுகிறது. ஆனால் கிறிஸ்துவோடு நிரந்தரமும் உறவை ஏற்படுத்தாததால் பழைய பாவ வாழ்விற்குச் செல்கிறார்கள்.

தொடரும்...

# பொங்கல் திருநாள் புது வாழ்வு பொங்கட்டும்



உழுதுண்டு வாழும் பழுதற்ற உழவர்களின் உழைப்புத் திருநாளே உழவுத் திருநாள். அதுவே தமிழர் திருநாள். மற்றும் நன்றித் திருநாள் என்னும் அழைக்கப்படுகின்றது. உழவுக்கும் உழவர்க்கும் பெருமை சேர்க்கும் விழா பொங்கல் விழா. மனித குலத்தின் உழைப்பின் மேன்மையைப் பயன் வடிவில் மக்களெல்லாம் ஒன்றுகூடித் துய்த்து, இன்புறுகின்ற இணையில்லாத் திருநாள் பொங்கல். பழமைகளை பக்குவமாய் வழியனுப்பிவிட்டு, வளர்ச்சிக்கும், வளமை கூட்டும் புதுவரவுகளுக்கும், மலர்ச்சியோடு மக்கள் தம் மனதால் வரவேற்பு இசைத்திடும் வண்ணத் திருநாள் பொங்கல் திருநாள்.

இன்று விளை நிலங்கள் எல்லாம் விலை நிலங்களாக மாறிக் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் நாம் சாப்பிடும் உணவுக்காக எத்தனை விவசாயிகள் பாடுபடுகின்றார்கள். அவர்களை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. ஆகவே அவர்களை நன்றி உணர்வோடு நினைத்தப் பார்ப்போம். அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவோம். வரும் நாட்களில் நல்ல மழை பெய்யவும் விவசாயம் ஓங்கவும் மக்கள் சந்தோஷமாக வாழவும் இறைவனிடம் மன்றாடுவோம். விளை நிலங்களைப் பாதுகாப்போம்.

### விடுதலைப் பயணம் 23:16

“வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதல் பயன் கிட்டும்போது, அறுவடை விழாவும், ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில் சேகரிப்பு விழாவும், எடுக்க வேண்டும்.”

ஆகவே பொங்கல் விழா உழைப்பின் பயனை பெற்று இறைவனுக்கு உழவர்களுக்கும் நன்றி கூறும் திருவிழா. நன்றியுடைமை, உறவினர்களை உபசரித்தல், உழவுத் தொழிலுக்கு பெருமை சேர்த்தல் போன்ற நற்குணங்களோடு பொங்கல் திருநாளை ஒவ்வொருவரும் போற்றி கொண்டாடி மகிழ்வோம்.

### சிந்தனை

**விதைக்கிறவர்களே அறுக்கின்றார்கள்
உழைக்கிறவர்களே ஊதியம்
பெறுகின்றார்கள்.**




## பொதுக்காலத்தின் 2வது ஞாயிறு 18.01.2015

**வாசக விளக்கம்:** இறை ஊழியத்திற்காக சாமுவேலை இறைவன் அழைப்பதை இறைவாக்கினர் ஏலி அவனுக்கு உணர்த்த அவன் மனம் மாறுவதை இன்றைய முதல் வாசகம் விளக்குகின்றது? கொரிந்து நகரில் வாழும் கிறிஸ்தவ மக்களுக்கு ஒழுக்கத்துடன் வாழவும், கிறிஸ்துவில் வாழவும் அழைப்பு விடுத்து தூய பவுல் அடியார் எழுதுவதை இரண்டாம் வாசகத்தில் பார்க்கின்றோம். இன்றைய நற்செய்தியானது "வந்து பாருங்கள் இயேசு தருகின்ற வாழ்வை வாழ்ந்து பாருங்கள்" என்ற அழைப்பைத் தருகின்றது. அத்துடன் கிறிஸ்தவ வாழ்வை விளம்பரம் செய்கின்ற பொறுப்பையும் தருகின்றது. இதற்கு இறைவனோடு நமக்குள்ள உறவு வாழ்க்கை சிறப்பாக இருக்க வேண்டும். இறைவனோடு நாம் வாழுகின்ற வாழ்வை பிறரோடு பகிர்ந்து கொள்கின்ற தாராள மனப்பான்மை இருக்க வேண்டும் அத்துடன் இயேசுவிலும், இயேசுவின் கொள்கைகளிலும் உள்ள கொள்ளைப் பிடிப்புள்ள வாழ்க்கை இருக்க வேண்டும். இன்றைய இறைவார்த்தைகள் யாவும் உறவுகளின் இருப்பிடமாகிய இறைவனில் நாம் உறவு கொண்டு வாழும் போது இறைவன் வழி நடந்து சமத்துவ வாழ்வினை வாழ முற்படுகின்றோம். எனவே நாமும் நமது அழைத்தலை புரிந்துகொண்டு இறையரசின் சாட்சிகளாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** 1 சாமு 3:3 - 10, 19
ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்.

**பதிலுரைப்பாடல் :** உமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே இதோ வருகின்றேன்.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 6:13-15,17-20
உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா மெசியாவை அதாவது அருட்பொழிவு பெற்றவரைக் கண்டோம். அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்பட்டன அல்லேலூயா

**நற்செய்தி :** யோவான் 1:35-42

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசு என்னும் நற்செய்தியை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கும் தூய திருச்சபையையும், அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் ஆசீர்வதிக்கவும், கொள்கைப் பிடிப்புடனும், உறுதியுடனும் அவர்கள் செயல்படவும் வேண்டிய வரங்களையும் தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்து இயேசுவை பின் செல்லும் மக்களாகிய நாமும் அழைத்தலைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழவும், கிறிஸ்தவ வாழ்வை தாராள மனதோடு பிறருடன் பகிரவும், நற்செய்தி காட்டும் சீடத்துவ வாழ்வை நாம் வாழவும், இயேசுவுடன் ஒன்றித்து அவரது பாதையில் வழிநடக்கவும் தேவையான நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவை எம் வாழ்வில் ஏற்று, சமுதாயத்தில் சாட்சிய வாழ்வு வாழவும், நற்செய்தியையும், விசுவாசத்தையும் பகிரவும், இயேசுவிலும் அவரது வார்த்தையிலும் கொள்கைப் பிடிப்புள்ளவர்களாக வாழ்ந்து வரவும், திருத்தூதர்களைப் போல் சீடத்துவ வாழ்வு வாழவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று

## பொதுக்காலத்தின் 3வது ஞாயிறு 25.01.2015

**வாசக விளக்கம்:** மாற்றம் என்பதில் மட்டுமே மாற்றம் இல்லை. குழந்தையாக பிறந்த நாம் சிறுவனாக இளைஞனாக முதியவராக மாற்றம் பெற்றக்கொண்டேயிருக்கிறோம். காலை மாலையாக பகல் இரவாக, மாற்றம் பெறுகின்றன. விதை, செடியாக, செடி மரமாக, மாற்றம் பெறுகின்றன. மாற்றம் இல்லாத இடமே இல்லை மாற்றம் எங்கும், எவ்விடத்திலும் எல்லா உயிர்களிலும் உள்ள பொதுவான உண்மை. இன்றைய இறை வார்த்தைகள் "மனந்திரும்புங்கள்" என்று நம்மை அழைக்கின்றன. நினிவே நகர மக்கள் தாங்கள் தீச்செயல்களுக்காக வருந்தி மனம் மாறினர். கடவுள் அவர்களை அழிக்காமல் காப்பாற்றினார். "விண்ணரசு நெருங்கி வந்து விட்டது மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்றார் திருமுழுக்கு யோவான் கடவுள் கொடுத்த கொடைகளில் முதன்மையானது இறைவார்த்தை இறைவார்த்தையை விசுவாசத்துடன் வாசித்து நம்பிக்கையுடன் ஏற்று அன்புடன் வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சித்தால் மனமாற்றமும், புனிதமும் நம்மைத் தேடிவரும். மனமாற்றம் என்பது பாவத்திலிருந்து பலவீனத்தில் இருந்து மனம் திரும்புவது மட்டுமல்ல நான் என்ற சுயநலத்தை விடுத்து கடவுளையும், பிறரையும் அன்பு செய்வதாகும். எனவே மாற்றம் நம்மிடம் ஏற்பட கடவுளிடம் மன்றாடுவோமாக.

**முதல் வாசகம் :** யோனா 3:1-5, 10
நினிவே மக்கள் தீய வழிகளினின்று விலகினர்.

**பதிலுரைப்பாடல் :** ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும்.

**இரண்டாம் வாசகம் :** 1 கொரி 7:29-31
இந்த உலக அமைப்பு கடந்து போகக் கூடியது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் அல்லேலூயா

**நற்செய்தி :** மாற் 1:14-20

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மனமாற்றத்தின் ஊடாகத் தன் மக்களை நிலை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும், இறைவார்த்தைப் பணியில் இவர்கள் அயராது உழைக்கவும் வேண்டிய வரங்களை இவர்கள் மீது பொழிந்தருள வேண்டுமென்று

நாட்டின் தலைவர்களும், மக்களும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு, நாட்டிற்கு தேவையான மாற்றங்களை முன் கொடுக்கவும், சுயநலம் துறந்து பொது நலம் பேணவும், மக்கள் மனங்களில் நம்பிக்கையை வளர்த்து நாட்டின் வளர்ச்சியில் அவர்களையும் இணைத்து செயல்படவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று

மனம் திரும்புங்கள் நற்செய்தியை நம்புங்கள் என்ற இயேசுவின் அறை கூவலை ஏற்று இத்திருவருகைக் காலத்தில் உண்மையான மனமாற்றம் பெற்றும் வெளி ஆடம்பரங்களை அகற்றி ஏழை எளியவரை மனக்கண்முன் நிறுத்தி அவர்களது மகிழ்ச்சியில் கலந்து வாழத் தேவையான நல் மனதைத் தந்தருள வேண்டுமென்று..

# புனித வின்சென்ட்

வின்சென்ட் ஜ்பெயின் நாட்டில் சரகோசா என்ற நகர் அருகில் ஹியூஸ்கா என்ற இடத்தில் பிறந்தவர். தன் வாழ்வின் பெரும் பகுதியை சரகோசா நகரில் கழித்தார். இங்குதான் கல்வி கற்றார். கத்தோலிக்க மறை போதிக்கப்பட்டடார். சரகோசா நகர் ஆயர் புனித வலேரியுசுக்கு பேச்சுத்தடை இருந்ததால் ஆயர் சார்பாக வின்சென்ட் பேசினார். போதித்தார். கிறிஸ்தவ மறைக்குவி விரோதியான உரோமையப் பேரரசன் தியோக்லெசியன் 303இல் கிறிஸ்தவ ஆயர் - குருக்களுக்கு எதிராகவும் 304 இல் பொதுநிலையினருக்கு எதிராகவும் அரச ஆவணம் பிறப்பித்தான். புனித மறைநூல்களை தீயிலிட வேண்டும் என்பதும் ஆணை. இதனால் உரோமையப் பேரரசைச் சே ர்ந்த ஸ்பெயின் நாட்டுக் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்னர்.


ஆயர் சார்பாக வின்சென்ட் கேள்விகளுக்குப் பதிலளித்தார். ஆயர் வலேயரியுசும், வின்சென்ட்டும் உரோமைய ஆளுநர் டேசியன் முன்னால் கொண்டு வரப்பட்டனர். வின்சென்ட் ஆயருக்காகவும் திருச்சபைக்காகவும் நாவன்மையுடன் பேசினார். இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தை கைவிட மறுத்தார். தம்மிடமிருந்த மறைநூல்களை தீயில் எரித்துவிட மறுத்தார். மாறாக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிக்கையிட்டு புற சமய நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் கடிந்து பேசினார்.

ஆளுநர் ஆணையிட வின்சென்டடும், ஆயரும் சங்கிலிகளால் கட்டப்பட்டு வெலேன்சியா நகருக்கு இழுத்துச் செல்லப்பட்டு சிறையில் பட்டினியுடன் சித்திரவதைக்குட்பட்டு நீண்ட காலம் அடைக்கப்பட்டனர். தீச்சூளையில் போடப்பட்ட இளைஞர்களைப்போல் (தானி 3:21) துன்புற்றபோது கடவுளால் ஆறுதல்படுத்தப்பட்டனர். பிறகு ஆயர் நாடு கடத்தப்பட்டார். ஆனால் வின்சென்ட் கடும் வாதைகளுக்கு உட்படுத்தப்பட்டார். சாட்டையால் அடிக்கப்பட்டார். உலோக முட்கள் நிறைந்த உலோக சட்டத்தில் கிட்டத்தப்பட்டு உடல் கிழிக்கப்பட்டார். நெருப்புக்கு மேல் வைக்கபட்ட கூரிய இரும்புக் கம்பிகளைக் கொண்ட சட்டத்தில் கிட்டத்தப்ட்டு வேக வைக்கட்டார். வினசென்ட்டின் காயங்களில் பன்றிக் கொழுப்பு மற்றும் உப்பு பூசப்பட்டதால் அவர் வேதனை அதிகரித்தது. எல்லா சித்திரவதைகளையும் ஏற்றுக்கொண்டு கண்களை விண்ணகத்தை நோக்கி உயர்த்தியவராய் அமைதியுடன் இருந்தார். இவ்வளவு கொடுமைகளும் வின்சென்ட்டின் உறுதியான விசுவாசத்திடம் தோற்றுப்போயின.

ஆகையால் மீண்டும் சிறைப்பிடிக்கப்பட்டார். தரையில் மட்பாண்டத் துண்டுகள், கூரியக் கற்கள் சிதறிப்போடப்பட்டு அதன்மேல் அவர் உடல் இழுத்து செல்லப்பட்டது. ஏற்கனவே உடலெல்லாம் கிழிக்கப்பட்டு காயப்படுத்தப்பட்ட வின்சென்டின் வேதனை இன்றும் அதிகரித்தது. வானதூதர்களிடமிருந்து ஆறுதலும், தேற்றுதலும் கிடைத்தது. சிறை விண்ணக ஒளியால் பிரகாசிக்கப்பட்டு ரோஜா மலர்களால் நிரப்பட்டது போல் நறுமண் வீசியது. சொல்லொண்ணா வேதனையில் துன்புற்றுக்கொண்டு முறிந்த போன முழங்கால்களுடன் முழந்தாள்படியிட்டு கடவுளைப் போற்றிப் பாடினார். அதிர்ச்சியும், திகைப்பும் கொண்ட சிறைக்காவலர் தன் மனமாற்றத்தை அறிக்கையிட்டு கிறிஸ்தவ மறையை ஏற்றுக்கொண்டார். எந்த சித்திரவதையும் வின்சென்டிடம் பலனளிக்கவில்லை என்று கேள்வியுற்ற உரோமையை ஆளுநர் சித்திரவதை செய்வதை நிறத்தவும் காயங்களுக்கு மருந்திட்டுக் கட்டவும் வசதியான ஓர் அறைக்கு வின்சென்ட்டை மாறறவும், சிறந்த ஆடைகளை அணிவித்து ரோஜா மலரின் இதழ்களால் பரப்பப்பட்டட மென்மையான படுக்கையில் கிடத்தவும் ஆணையிட்டான்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

# குடும்பமாக செபிப்பதால் கிடைக்கும் பயன்கள் என்ன?



"கூடி செபிக்கும் குடும்பம் கூடி வாழும்" என்ற விருதுவாக்கிற்கிணங்க குடும்ப செபமாலை பிரார்த்தனை எல்லாம் குடும்பமாக செபிக்க வேண்டும். இரண்டு பேர் கூடி செபிக்கிற இடத்தில் நானும் இருக்கிறேன் என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். எனவே நாம் குடும்பமாக செபிக்கும்போது இறைவனும் நம்மிடையே பிரசன்னமாகி நமக்கு என்ன தேவையோ அதை உரிய காலத்தில் நமக்கு கிடைக்கச் செய்வார். தனித்து செபம் செய்வதை விட குடும்பமாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இறைவனுக்காக குறைந்தது ஒரு அரை மணி நேரம் செலவிட்டால் நமக்கு வரும் துன்பம், எல்லாம் ஓடி விடும். அந்த நேரத்தில் விவிலியத்தில் இருந்து பகுதியைப் படிக்கலாம். இதனைக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு விவிலியம் வாசிக்கும் வழக்கமும் வந்து விடும்.

இன்று சில வீடுகளில் குடும்ப செபம் இல்லாமல் போய்விட்டது. காரணம் இப்போது எல்லா வீடுகளிலும் பல மணி நேரங்கள் T.V அவ்வீட்டை ஆக்கிரமித்துள்ளமையாகும்.

வு.ஏ தொடர்களும் பார்ப்பதில் இருக்கும் ஆர்வம் பலர் குடும்பங்கள் குடும்ப செபத்தை தவிர்க்கின்றனர். அதனால் தேவ பிரசன்னம் இல்லாமல் போய்விடுகிறது. நாங்கள் குடும்பமாய் செபிக்கும்போது இறை பிரசன்னத்தைப் பெறுகிறோம். அதனால் ஒற்றுமை, சமாதானம், மனதில் மகிழ்ச்சி பிரசிச்சினைகளுக்குத் தீர்வு, முடிவு எடுத்தல் போன்ற சகல வரங்களையும் இறைவனிடம் பெறலாம்

**கூடி செபிக்கும் குடும்பம், கூடி வாழும்**

**பரிசுத்த திருத்தந்தை 2015.01.13 அன்று இலங்கையை வந்தடைந்தார். அன்றைய நிகழ்வுகள்**











# பரிசுத்த திருத்தந்



பரிசுத்த திருத்தந்தை 2015.01.14 அன்று காலிமுகத்திடலில் அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதராக்கிய திருப்பலி நிகழ்வுகள்



மருத

# தையின் இலங்கை விஜயம் – 2015










C.M. ஸ்ரெபான் பர்னாந்து, தரம் 4F,
தூய திருத்துவ கல்லூரி, கண்டி

# புனித இருபத்தி மூன்றாம் ஜோன்




**விதையின் விருட்சம் மண்ணில் மலர்ந்த மனிதம்மாமனிதராய் பயணித்துத் - தம் பாதப் பதிவுகளை, எண்ணக் குவியல்களை வாழ்வின் வளங்களை - நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். புனிதர் பாதம் பணிவோம்! புண்ணியம் பலவும் பெறுவோம்!!**

## மண்ணில் மனிதம்

இதமும் இனிப்பும் எப்பச் சுவையாகிறதோ, விதையும் முளையும் எப்படி விருட்சமாகின்றதோ அவ்வாறே மனிதரின் பிறப்பும் வளர்ப்பும் சிறப்பாகிறது அல்லது சிரிப்பாகின்றது. மனிதனின் வாழ்வில் முக்கியமான தருணங்கள் மூன்று 1. பிறந்த தருணம் (Moment of Birth) 2. வளரும் தருணம் (Moment of Growth) 3. இறப்பின் தருணம் (Moment of Death) பிறந்த சூழல் ஏன் முக்கியம்? அதுதான் ஒரு மனிதனின் அடையாளத்தை நிர்ணயம் செய்கிறது. யார்? எந்தக் குடும்பம்? பெற்றோர் எப்படிப்பட்டவர்கள்? பிறந்த இடம் எது? கலாச்சாரம் என்ன? இவைபோன்ற காரணிகள் தாம் ஒரு குழந்தையின் வளர்ச்சியை நிர்ணயம் செய்கின்றன.

ஆண்டொன்றின் 365 நாட்கள் சுற்றுப் பயணத்தில் 1881ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 25ம் நாள் மறக்க முடியாத, மறக்கக் கூடாத, நினைவில் நிறுத்த வேண்டிய நாள். இந்தப் பூமிக்கு தேவதை ஒன்று இறங்கி வந்த நாள். குறிஞ்சிப் பூப்பது பன்னிரெண்டு வருடத்திற்கு ஒரு முறைதானாம் யார் சொன்னது? வருடந்தோறும் திருச்சபையின் வளர்ச்சிக்காய் ஏற்படும் மாற்றங்களில் மலர்ந்து கொண்டிருக்கிறது இந்தப் பூ. ஆம் அன்றுதான் நம் புனிதர் 23ஆம் ஜோன் உதயமானார்.

### குடும்பமும் குழந்தையும்

இத்தாலி நாட்டில் புகழ்பெற்றது லம்பார்டி (Lombardi) நகரம். அந்த நகரத்திற்குட்பட்ட பெர்கமோ (Bergamo) மறைமாவட்டத்தில் உள்ள சிற்றூர் "ஸோத்தோ இல்மோந்தே" (Sotto il Monto). பெர்கமோவிலிருந்து 12 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது இக்கிராமம். கிராமம் என்றாலே அதன் இயற்கை அழகுதான் நம் உள்ளங்களை கொள்ளை கொள்கின்றது. இனி வரப்போகும் நம் தலைமுறைக்கு இப்படி ஒன்று இருந்ததே புத்தகத்தில் படித்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டிய அவலம்.

நம்பிக்கையையும், தைரியத்தையும் வைர முகவரியாக்கி நடைபயின்ற ஸோத்தோ இல்மோந்தே கிராமத்தில் ஜியோவான்னி பாத்தீஸ்தா ரொன்கால்லி (1854-1935) மற்றும் மரியான்னா ஜுலியா மாஸல்லா (1854 - 1939) என்பவர்களுக்குப் பிறந்த நான்காவது குழந்தைதான் ஆஞ்சலோ ஜோசேப்பே ரொங்கால்லி (Angelo Giusepae Roncalli), என்ற நம் புனிதர் 23ஆம் ஜோன். குடும்பத்தில் முதல் ஆண்குழந்தை. ஒவ்வொரு குழந்தையும் மண்ணில் பிறக்கும் போது கடவுள் இந்த உலகத்தை இன்னும் அதிகமாக அன்பு செய்கிறார் என்ற செய்தியோடு பிறக்கிறது. (தாகூரின் கூற்று) என்ற உணர்வை குழந்தையின் பிறப்பு ரொன்கால்லி குடும்பத்திற்கு ஏற்படுத்தியது.

தொடரும்...

# அறிந்து கொள்ளுங்கள்

## புத்தகம் (நூல்)

1. புத்தகம் எமது அறிவு பொக்கிஷம். பள்ளிக்கூடம் சம்பளம் கொடுக்கும் சக்தி
2. முதன் முதலில் புத்தகத்தின் எழுத்துவடிவை ஆணிவேராக்குபவர் குரு, ஆசிரியர், பெற்றோர்.
3. நல்ல, புத்தகத்தை வாசிப்பவர் நல்லவன், வல்லவன் சிந்தனையுள்ளவன்.
4. புத்தகம் வாசிப்பதும், பத்திரிகைகள், கதைகள், சரித்திரங்கள், வரலாறுகள் வாசிப்பதும் சிறுவயதிலே பழகி கொள்வது சிறந்தது.
5. வாசிப்பது ஒரு பொழுதுபோக்கு என்று கருதுபவர்களும் உண்டு. இதன்மூலம் மனிதன் நல்ல பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திக் கொள்ளுகின்றான்.
6. சிறுவயதிலேயிருந்து, வாசிக்கும் பழக்கம் உள்ளவர்கள், அவர்களின் சிந்தனை வேறுபக்கம் திரும்பாது.
7. எப்பொழுதும் அறிவுக்கு சமாச்சார புத்தகங்கள் வாசிப்பது மிக மிக ஒழுங்கு
8. படிப்பு ஏற, ஏற கடவுள் மட்டில் விசுவாசத்திலும் பெரியோர்களின் மட்டில் வணக்கத்திலும் குறைவடையாமல் நடப்பது பழக்கம்
9. கத்தோலிக்க பத்திரிகைகள் வேறு சமய பத்திரிகைகளை அலட்சியம் செய்யாமல் சந்தோஷமாக வாசித்து பயன் பெறுவது சிறப்பு
10. பிரித்தானியா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், சீனா, பிரான்ஸ், டென்மார்க், ஸ்பெயின், கனடா, சுவீடன் போன்ற நாடுகளில் மிகப்பெரிய புத்தக சாலைகள் இருக்கின்றன.
11. உலகின் மிகப் பெரிய நூலகம் லண்டன் மாநகரில் பிரிட்டிஷ் நூலகம் ஒன்றாக இருக்கின்றது. இது 1753ம் ஆண்டு நிறுவப்பட்டதாம்.
12. எமது நாட்டின் தலைநகர் கொழும்பில் தமிழ்சங்க நூலகம் அமைந்திருக்கிறது. (வாசிப்பின்) புத்தகத்தின் தாகத்தை போக்க வழியாக இயங்கி வருகிறது. பயன் பெறுக.

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு - 12**

# புதுநன்மை நாள்



மாமன்னர் நெப்போலியன் ஒரு நாள் தனது போர் தளபதிகளோடு பேசிக் கொண்டிருந்தார். அபபோது ஒருவர் "எனது வாழ்க்கையில் மிக மகிழ்ச்சிகரமான நாள், மரங்கோ யுத்தத்தில் வெற்றி பெற்ற நாள்" என்றார். "ஆஸ்டர்லிட்ஸ் களத்தில் வெற்றிபெற்ற தினமே என் வாழ்க்கையிலே மகிழ்ச்சியான நாள்" என்றார். இன்னொருவர். இவ்வாறே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வெற்றி தினங்களையும் குறிப்பிட்டு அவர்களது மகிழ்ச்சியான நாட்களாகக் கூறினர். இறுதியாக பல வெற்றிகளை கண்ட மாமன்னர் நெப்போலியன் தனது மகிழ்ச்சியான நாள் எதுவென்று கூறினார்?

**"புதுநன்மை எடுத்த நாள்தான் என் வாழ்க்கையில் மகிழ்ச்சியான நாள்"** என்று முகமலரக் கூறினார்.

## "ஆண்டவரில் நான் அகமகிழ்ந்து அக்களிப்போம்"




"அம்மா நீங்கள் மிகவும் அழகாயிருக்கிறீர்கள். உங்கள் மேனி அழகுக்கு என்ன உபயோக்கின்றீர்கள்?" என்று ஒரு அருமையான அம்மாவிடம் கேட்க அவர்கள் கூறிய பதிலாவது;

"என் உதடுகளுக்கு உண்மையை உபயோகிக்கின்றேன்.
என் குரலுக்கு இனிமையை உபயோகிக்கின்றேன்.
என் கண்களுக்கு அனுதாபம் தீட்டுகின்றேன்.
என் கரங்களுக்கு தர்மம் தருகின்றேன்.
என் இருதயத்தில் அன்பை வைக்கின்றேன்.
என்னை விரும்பாதோருக்காக செபம் செய்கின்றேன்" என்றாள்.

**"அருள் நிறைந்த மரியே வாழ்க!"**

**"மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாய் இருக்கட்டும். கடவுள் பார்வையில் அதுவே விலையுயர்ந்தது"**

**(1பேதுரு 3:4)**

# பீடப்பணியாளர்களே இது உங்களுக்காக!



# அவருக்காய் பணிபுரிய... 2






## பீடப்பணியாளர்களின் அடிப்படைக் கூறுகள்

### 1. யார் பீடப்பணியாளராகலாம்?



1. ஒவ்வொரு மறைமாவட்டத்தின் கொள்கைகளுக்கேற்ப சிறுவர் சிறுமியர் இருவரும் பலிப்பீடப் பணியாளராகத் திருவழிபாட்டு நிகழ்வுகளில் பணி செய்யலாம்.
2. பீடப்பணியாளராக பணிபுரிவதற்கு வயது வரம்பு இல்லை. ஒப்புரவு அருட்சாதனமும், திவ்விய நற்கருணை அருட்சாதனமும் பெற்றிருந்தாலே போதும்.

### 2. பீடப்பணியாளர்களுக்கான அடிப்படைப் பண்புகள்

- ✠ நற்பண்பு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்
- ✠ திருவழிபாடுகளைப் பற்றிய அறிவும் நுண்மதியும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- ✠ கத்தோலிக்க திருச்சபையின் கோட்பாடுகள் மீதும் இறையேசுவின் படிப்பினைகளிலும் விசுவாசம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- ✠ திருவழிபாட்டு நிகழ்வுகளில் ஆர்வமிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

### 3. பீடப்பணியாளர்களுக்கான கடமைகள்

1. பீடப்பணியாளர்கள் திருவழிபாட்டு நிகழ்வுகளில் குருக்களுக்கு அருகாமையில் அமர்ந்து, தேவையான நேரங்களில் உதவி செய்தல் வேண்டும்.
2. திருவழிபாட்டு நிகழ்வுகளின் போது, பீடப்பணியாளர்கள் திருப்பீடத்தை விட்டு மற்ற அலுவல்களுக்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.
3. பீடப்பணியாளர்கள் பீடமுற்றத்தில் அமரும் போது நேராக நிமிர்ந்து உட்கார வேண்டும். கால்களை மடக்கி அமராமல் மடியின் மீது வைத்து உட்கார வேண்டும்.
4. பீடப்பணியாளர்கள் திருவழிபாட்டு நிகழ்வுகளில் தவறாமல் கலந்து கொண்டு செபங்களை குரலை உயர்த்தியும், பக்தியோடும் சொல்லுதல் வேண்டும்.
5. பீடப்பணியாளர்கள் பலிபீட முற்றத்தில் தேவையற்ற அசைவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

### 4. பீடப்பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள்

- ✠ ஆலயத்தையும், திருப்பண்ட அறையையும் சுத்தம் செய்தல்.
- ✠ பீடப்பணியாளர்களின் திருஉடையையும், திருவழிபாட்டு நிகழ்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் துணிகளையும் துவைத்துத் தூய்மையாக வைத்திருத்தல்
- ✠ திருவழிபாட்டு நிகழ்வுகளுக்குப் பின்பு ஆலயத்தினை மூடுவதில் வேதியருக்கு உதவி செய்தல்.
- ✠ சிறப்புத் திருவழிபாட்டு நிகழ்வுகளுக்கு இடங்களையும் திரு உபகரணங்களையும் தயார் செய்தல்.
- ✠ இல்லங்களிலோ அல்லது மருத்துவமனைகளிலோ உள்ள உடல் நலம் குன்றிய பங்கு மக்களைச் சந்தித்து அவர்களுக்காக செபம் செய்தல்.
- ✠ குழுவாக இணைந்து ஒரு சில பொது இடங்களைச் சுத்தம் செய்தல்.
- ✠ பங்கு மக்கள் இறை வேண்டல் செய்ய தங்களது வீடுகளுக்கு அழைத்தால் குழுவாகச் சென்று அவர்களுக்காக செபம் செய்தல்.
- ✠ வாரத்திற்கு ஒரு முறை ஒன்றாக இணைந்து மரியன்னைக்கு செபமாலை சொல்லுதல்.

### 5. பீடப்பணியாளர்களுக்கான பத்துக் கட்டளைகள்

1. பாவம் செய்வதை விட சாவதே மேல்
2. சொல், செயல் மற்றும் எண்ணத்தில் தூய்மையுள்ளவராக இரு.
3. இறையன்பை மையப்படுத்த, பாவத்தை நீக்கித் தூய வாழ்வு வாழ முயற்சி எடு.
4. பெற்றோரையும் பெரியோரையும் மதித்து நட.
5. திருவழிபாட்டு நிகழ்வுகளிலும், இறை வேண்டல்களிலும் பக்தியுடன் பங்கு கொள்.
6. எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்ய முன் தயாரிப்போடு இரு.
7. தினந்தோறும் தூய ஆவியை நோக்கி செபம் செய்.
8. ஒவ்வொரு நாளும் மரியன்னையின் துணையை நாடி செபமாலை செய்.
9. நாளின் தொடக்கத்தில் உன் காவல் தூதன் துணை வேண்ட மறவாதே.
10. ஆடு! பாடு! விளையாடு! ஆனால் பாவம் மட்டும் செய்யாதே.

**பணிவாழ்வு தொடரும்...**

# வாய்ப்பு

- ✠ வாய்ப்பு தானாக வருவதில்லை. மனிதன் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

  **– பெர்னார்ட்சா**

- ✠ சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதைத் தவறவிடுபவர் முட்டாள்

  **– மகாவீரர்**

- ✠ கதவைத் தட்டாதவர்கள் எத்தனையோ வாய்ப்புக்களை இழந்திருக்கின்றார்கள்.

  **– அடிகன்**

- ✠ வாய்ப்பே இல்லை என்று சலித்துக் கொள்பவர் முட்டாள்.

  **– சாக்ரடீஸ்**

- ✠ தண்ணீரில் மூழ்கியிருக்கும் போது காற்றை அதிகமாக விரும்புவது போல், வாழ்க்கையில் வெற்றியை விரும்பினால் அது உனக்குக் கிட்டும்.

  **– சாக்ரடீஸ்**



# கிறிஸ்துவின் சாயல்

சீனா நாட்டில் ஒரு சிறுமி இருந்தாள். அவளது ஊரிலிருந்து கத்தோலிக்கக் குரு ஒருவரை அவள் அடிக்கடி கவனித்து வருவாள். அவர் கோயிலில் செபித்துக் கொண்டிருக்கும் பொழுது அவள் அவரையே பார்த்துக் கொண்டிருப்பாள். அவர் போதிக்கும் பொழுது கவனத்துடன் செவிமடுத்தாள். அவர் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்வதையும் வழியில் வருகிறவர்களுக்கு வந்தனம் கூறுவதையும், எல்லாரோடும் அன்புடன் சல்லாபிப்பதையும் அவள் கவனித்தாள். ஒரு நாள் அந்தச் சிறுமி அடுத்திருந்த கிராமத்துக்குச் சென்றபோது அங்கு மறைக்கல்வி வகுப்புக்குப் போயிருந்தாள். போதித்துக் கொண்டிருந்த ஒரு சகோதரி கிறிஸ்துநாதருடைய பெயரைச் சொல்லாமலே அவர் கடைப்பிடித்து வந்த புண்ணியங்களை வர்ணித்துக் கொண்டிருந்தார்கள்.

எப்பொழுதும் அன்பாயிருந்து எல்லோருக்கும் உதவி செய்த ஒருவரைப் பற்றி சகோதரி எடுத்துக் கூறினார்கள். புதிதாய் வந்திருந்த அடுத்த ஊர்ச் சிறுமியை அவர்கள் கண்டதும் அவளை அணுகி, “நான் யாரைப் பற்றிப் பேசுகின்றேன் என்று உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். “ஆம், எனக்குத் தெரியும். எங்கள் ஊரிலுள்ள குருவைப் பற்றிப் பேசுகிறீர்கள்” என்று சிறுமி பதிலளித்தாள்.

**‘கிறிஸ்து இயேசுவின் மனநிலையைக் கொண்டிருங்கள்’**

**‘நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள். ஏனெனில் நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறேன்’**



## செபம்

**வேண்டுதல்களின் சுருக்குப் பைகளை விரிக்கும் இடமல்ல, அது இதயத்தின் சுருங்கிய தசைகளை நிமிர்த்தும் இடம்.**

**சூல் கொண்ட சோகங்களை கால் கொண்டு நசுக்குமிடம்**

# இனிமையான இல்வாழ்விற்கு...! 2

## திருமணம் ஓர் அருள் அடையாளம்



திருமணம் ஓர் அருள் அடையாளம். புனிதத்தின் வாய்க்கால். இவ்வருளடையாளத்தின் மூலம் மணமக்கள் கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே-யுள்ள உடன்படிக்கை அன்பிற்குச் சான்றுபகர்கின்றனர். ஒருவர் ஒருவரை அன்பு செய்யவும், ஒருவர் ஒருவருக்குப் பிரமாணிக்கமாய் இருக்கவும் குழந்தைகளைப் பெற்று வளர்க்கவும் தேவையான அருளைத் திருமணத்தின் மூலம் பெறுகின்றனர். மணமக்கள் திருமணம் என்ற அருளடையாளத்தின் வழியாகக் கிறிஸ்து மணமக்-களைச் சந்திக்கிறார். அவர்களோடு என்றும் தங்கி வாழ்கிறார். திருமணத் திருவருட்சாதனத்தின் மறைபொ-ருளையும் அதன் மேன்மையையும் புனித பவுலடிார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். (வாசிக்கவும் எபேசி 5:25-32)

திருமணமென்னும் அருளடையாளத்தால் மணமக்கள் ஒரு வகையில் திருநிலைப்படுத்தப்படுகின்றனர் என்று அறிக்கையிட்டுள்ளது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இன்றைய உலகில் திருச்சபை - 48) “திருப்பட்டங்களால் குருக்கள் திருநிலைப்படுத்தப்படுகின்றனர். துறவற வார்த்தைப்பாடுகள் மூலம் துறவறத்தார் திருநிலைப்ப-டுத்தப்படுகின்றனர். அவ்வாறே, மணமக்களும் திருமணம் என்ற அருளடையாளத்தின் வழியாகத் திருநிலைப்ப-டுத்தப்படுகின்றனர்” என்று சங்கம் துணிவாக, பகிரங்கமாகத் திருமணத்தின் புனிதத் தன்மையைப் பறைசாற்றுகின்றது. எனவே, திருமணம் என்னும் திருவருட்சாதனத்தால் திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் என்பதை மணமக்கள் ஒருபோதும் மறக்கலாகாது.

### திருமணத்தின் திருப்பணியாளர்கள்

திருவருட்சாதனங்களை நிறைவேற்றுபவர் குருதான் என்று நினைக்கின்றோம். திருமணமென்னும் அருளடையாளத்தை நிறைவேற்றும் திருப்பணியாளர் (Minister) யார் என்று பார்த்தோமானால், அது குரு அல்லர், மாறாக, மணமக்களே, ஏனெனில், மணமக்களின் சம்மதத்தைத் தெரிவிப்பது குரு அல்லர், மணமக்கள் தாம் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. அப்படியானால், குரு இல்லாமல் திரும-ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமா என்ற கேள்வி எழலாம். திருமணத்தில் குருவின் பணி என்ன? குரு மணமக்களின் சம்மதத்தைக் கேட்டு, அதைச் சொல்ல வேண்டுமெனில், மணமக்கள் தங்கள் சம்மதத்தை அதிகாரம் பெற்ற ஒரு குருவின் முன்னிலையிலும், இரண்டு சாதாரணச் சாட்சிகள் முன்னிலையிலும் தெரிவிக்க வேண்டும். எனவே, மணமக்களே திருமணத்தின் திருப்பணியாளர்கள். குருவானவரோ திருமணத் திருப்பலியை நிறைவேற்றி, மணமக்களின் சம்மதத்தைக் கேட்டுப் பெறுகின்றார். மணமக்களைத் திருச்சபையின் பெயரால் ஆசீர்வதிக்கின்றார். மணமக்கள் ஒருவர் ஒருவருக்குத் திருமணம் என்ற அருளடையாளத்தை வழங்குவதன் மூலம் அவர்கள் தங்கள் பொதுக் குருத்துவத்தைச் செயல்படுத்துகின்றனர்.

### திருமணம் ஒரு மறைபொருள்

“இதில் அடங்கியுள்ள மறையுண்மை பெரிது” என்கிறார் பவுலடியார் (எபே 5:32). திருமணம் ஒரு மறைபொருள். எப்படியெனில், அது இறைவனின் மீட்புத் திட்டத்தைத் தன்னகத்தே உள்ளடக்கிய மாபெரும் மறையுண்மை.

நற்கருணை மறைபொருளைப் போலவே திருமணமும், இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலங்களையும் தன்னுள் அடக்கியுள்ளது.

**நினைவுகூர்கிறது** (இறந்தகாலம்) : மீட்பு நிகழ்ச்சியை, உடன்படிக்கையின் அன்பை நினைவுகூர்வதால்.

**செயலாக்குகிறது** (நிகழ்காலம்) : கிறிஸ்துவின் மன்னிப்பையும், மீட்பையும் ஒருவர் ஒருவருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் வழங்க அருள் வளம் அளிக்கிறது.

**முன்னறிவிக்கின்றது** (வருங்காலம்) : உலக முடிவில் வரவிருக்கும் கிறிஸ்து என்ற ஒப்புயர்வற்ற மணவாளனைச் சந்திக்கும் நம்பிக்கையை எடுத்துரைக்கின்றது.

ஆனால், மறைபொருளாகிய இந்தத் திருமணம் இன்று கேலிப் பொருளாகிவிட்டது. மணமக்களுக்கு அழகு நிலையத்தில் ஒப்பனை செய்யத் தாமதமானால், திருமணம் நிறைவேற்றும் ஆயர், குருக்கள் அனைவரும் காத்திருக்க வேண்டியதுதான். இன்று திருமணத் திருப்-பலியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது வீடியோவும் புகைப்படமும்தான். இதயங்களை மேலே எழுப்புவதற்குப் பதிலாக வீடியோவை மேலே எழுப்புகின்றனர்.

வீடீயோக்களும், புகைப்படக் கலைஞர்களும் வரவில்லையானால் திருமணத் திருப்பலியே தாமதமாகிறது. திருமணத் திருப்பலியின் மாண்பு, புனிதத் தன்மை மங்கிவிட்டது. ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து திருமண ஒப்பந்தத்தை ஓர் அருளடையாளத்தின் மாண்பிற்கு உயர்த்தியுள்ளார் என்றும் அதன் விளை-வாகத் திருமுழுக்கு பெற்ற இரு நபர்களிடையே அருளடையாளமில்லாத வெறும் திருமண ஒப்பந்தம் மட்டும் இருத்தல் இயலாததென்றும் திருச்சபைச் சட்டம் அறுதியிட்டுக் கூறுகிறது. (தி.ச 1055 பிரிவு 2)


திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார். “திருமுழுக்கு பெற்ற ஒருவர் பங்குத் தந்தையிடம் “எனக்குத் திருமண அருளடையாளத்தில் நம்பிக்கை இல்லை, எனக்குத் திருமண ஒப்பந்தம் மட்டும் போதும்” என்று கூறினால், அவரின் திருமணத்தைப் பங்குத் தந்தை நிறைவேற்றக்கூடாது.

“கத்தோலிக்கத் திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்று மணமக்களிடையே நிகழும் திருமண ஒப்பந்தம் எவ்வாறு ஓர் அருளடையாளமோ அவ்வாறே ஏனைய கிறிஸ்தவ சபைகளில் செல்லுபடியான திருமுழுக்கு பெற்றுள்ள மணமக்களிடையே நிகழும் திருமண ஒப்பந்தமும் ஓர் அருளடையாளமே. எனவே, ஏனைய கிறிஸ்தவ சபைகளில் திருணம் செய்துகொண்ட மணமக்களுக்குள் ஒருவர் அச்சபையிலோ அல்லது நீதிமன்றத்திலோ மணமுறிவு பெற்று, அதன் பின் கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்ந்து, ஒரு கத்தோலிக்கக் கிறிஸ்தவரைத் திருமணம் செய்ய முன்வந்தால் அவரது திருமணத்தை ஒருக்காலும் மந்திரிக்கக் கூடாது. ஏனெனில், அவருடைய முதல் திருமணம் ஓர் அருளடையாளத் திருமணமாகும்”.

தொடரும்



# ehk; xt;bthUtUk; jiyrpwe;j ewbra;jpahsuhnthk;



**24.11.2013 அன்று 'நற்செய்தியின் மகிழ்ச்சி'** (The Joy of the Gospel - Evangeli Gaudium) **என்ற 288 எண்கள் கொண்ட அப்போஸ்தலிக்க அறிவுரை ஒன்றை திருத்தந்தை பிரான்சிஸ் உலக மக்களுக்கு அளித்தார். அவ் அப்போஸ்தலிக்க அறிவுரையைத் தழுவிய நற்செய்திப் பணி பற்றிய ஒரு சில கருத்துக்களை உங்களுக்குத் தருகின்றோம்.**

1. ***நாம் யார்?***

கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்செய்தியாளர்களாகத் திகழ கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். புனித மத்தேயுவைத் தேர்ந் -தெடுத்ததுபோல் கடவுள் நம்மையும் தேர்ந்தெடுத்திருக்கின்றார்.

2. ***நற்செய்தி என்றால் என்ன?***

நல்ல செய்திதான் நற்செய்தி. கடவுள் நம்மை அன்பு செய்கிறார் (எசா 49:15, 16, யோவா 3:16) என்பதே நற்செய்தி.

3. ***நற்செய்தியை எடுத்துரைக்க தலைசிறந்த வழி எது?***

மகிழ்ச்சி நிறைந்த (1 தெச 5:16) நமது அன்பு வாழ்வால் ( 1 கொரி 13:1-10) நற்செய்தியை சிறந்த முறையில் நாம் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கலாம்.

4. ***இன்று நற்செய்திப் பணிக்குத் தடைக்கற்களாக அமைந்திருப்பவை எவை?***

❋ "நான் உண்டு" "என் வேலை உண்டு" "நான் வாழ்ந்தால் போதும்" "நான் மட்டும் வாழ்ந்தால் போதும்" என்ற மனநிலை (indiviualism).

❋ "நான் என்ன, என் சகோதரனுக்கு காவலாளியா? (தொ.நூ 4:9) என்று கேட்கும் அக்கறையற்ற வாழ்க்கை.

❋ திருச்சபையில் எந்தக் குறையும் இல்லை. எல்லாம் நன்றாகத் நடந்து கொண்டிருக்கிறது என்ற மனநிலை (gray pragmatism). உண்மை நிலையை உணராத நிலை.

***அ) விழிப்புணர்வு அற்ற நிலை***

❋ இன்று பல குடும்பங்களில் குடும்பத்திலுள்ள எல்லாரும் ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பதில்லை. திருவிவிலியம் இல்லாத குடும்பங்கள் உண்டு.

❋ இன்று பல குடும்பங்களில் குடும்ப செபமாலை சொல்லப்படுவதில்லை. பல குடும்பங்கள் குடியினால் அழிந்து கொண்டிருக்கின்றன.

❋ இன்று கிறிஸ்தவ மக்களுக்கு இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்க மறைக்கல்வி ஏடு ஆகியவற்றைப் பற்றிய போதிய தெளிவு இல்லை.

***ஆ) 'இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது' என்ற நம்பிக்கையற்ற மனநிலை.***

❋ கிறிஸ்தவர்களுக்குள்ளே நிலவும் போட்டி, பொறாமை, பகை, ஏற்றத்தாழ்வு சண்டைச் சச்சரவு.

5. ***நற்செய்தியாளர்கள் கொண்டிருக்க வேண்டிய பண்புகள் யாவை?***

❋ ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாக இருக்க வேண்டும். துணிச்சல் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், எந்தவித எதிர்ப்புக்கும் பயப்படாமல் நற்செய்தியை எடுத்துரைக்க வேண்டும். செப வீரர்களாக இருக்க வேண்டும். உழைப்பாளிகளாக இருக்க வேண்டும்.

❋ இயேசுவின் மீதும் அளவற்ற அன்பு கொண்டவர்களாக விளங்கி, அவரது கட்டளையை (மாற்கு 16:15( நிறை வேற ஆசை





கொண்டவர்களாக இருக்க வேண்டும். பலனை எதிர்பார்க்காமல் வாழ்ந்த அன்னை மரியாவை முன்மாதிரியாகக் கொண்டு நற்செய்தியைப் போதிக்க வேண்டும்.

6. ***யார் நற்செய்தியாளராகத் திகழ முடியும்?***

❋ இயேசுவைச் சந்தித்தவர்களால் மட்டுமே, அனுபவித்தவர்களால் மட்டுமே நற்செய்தியாளர்களாக விளங்க முடியும். உதாரணம் - அன்னை மரியா (லூக்கா 1: 26-38) சமாரியப் பெண் (யோவா 4:1-30) மகதலா மரியா (யோவா 20:11-18, புனித பவுல் (திப 9:1-9) திருத்தூதர்கள் ( 1 யோவா 1:1-4)

❋ கடவுளைச் சந்திப்பது எப்படி? நற்செய்தியாளர்கள் நிச்சயமாக ஆழ்ந்த அமைதியின் வழியாக, ஆழ்நிலை தியானத்தின் வழியாகக் கடவுளைக் காணலாம் (1 அர 19:1-13, கலா 1:16-18)

7. ***ஒரு நற்செய்தியாளருக்கு ஆற்றல் அளிப்பது எது?***

செபம் மன்றாட்டு, பிரார்த்தனை

***செப வாழ்வை எப்படி அமைத்துக்கொள்ளலாம்***

திருப்பாடல்களை படிக்கலாம், பாடலாம் திருப்பலியில் பங்கேற்கலாம். செபமாலை சொல்லலாம். திவ்ய நற்கருணையை ஆராதிக்கலாம், மனதிற்குப் பிரியமான செபத்தை திரும்பத் திரும்பச் சொல்லலாம். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை உற்று நோக்கித் தியானம் செய்யலாம். பெற்ற நன்மைகளுக்காக கடவுளுக்கு நன்றி சொல்லலாம். அவரைப் புகழலாம். திருமுழுக்கு, திருமணம், குருத்துவம், ஆகியவற்றின் வாக்குறுதிகளைப் பற்றி அடிக்கடிச் சிந்தித்துப் பார்த்து அவற்றைப் புதுப்பித்துக் கொள்ளலாம்.

8. ***இன்றைய திருச்சபைக்கு தேவையானது எவை?***

இன்று உலகம் "மாதிரி மனிதர்களுக்காக ஏங்குகின்றது. முக்கியமாக உண்மையான நம்பிக்கையாளர்களைத் தேடுகின்றது. கனிவின் பரிணாம வளர்ச்சிக்காக உலகம் ஏங்குகின்றது. இன்று திருச்சபைக்கு நற்செய்தி போதிக்கும் புதிய வழிமுறைகள் தேவை. கல்வி, மருத்துவம், சமூகப்பணி, கருத்தரங்கு, நூல் வெளியீடு, தியானம், மறையுரை சுவரொட்டிகள், விளம்பரங்கள், சினிமா நடனம், பாட்டு, ஆகியவற்றோடு நிறுத்திக் கொள்ளாமல், சிறையிலிருப்போரைச் சந்திக்கும் பணி, நோயுற்றோரை சந்திக்கும்பணி, குடிப்பழக்கத்திற்கு அடிமையானோர்களை விடுவிக்கும் பணி, மாற்றுத் திறனாளிகளுக்கும், அனாதைகளுக்கும் மறுவாழ்வு அளிக்கும் பணி, சாலையோரத்தில் மரணத்தோடு போராடுகின்றவர்களுககு உதவிக்கரம் நீட்டும்பணி, வீடு சந்திக்கும்பணி, குடும்பச் செபத்தை ஊக்குவிக்கும் பணி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தேடித் தரும்பணி போன்றவற்றில் ஈடுபடும் நற்செய்தியாளர்கள் இன்றையத் திருச்சபைக்குத் தேவை.

❋ துன்பப்பட்ட காயப்படத் தயராக இருக்கும், அழுக்கு நிறைந்த மக்கள் நடுவே வாழும் திருச்சபை தேவை.

❋ இயேசுவின் நட்பைப் பிரதிபலிக்கும் (மத் 9:1-9) திருச்சபை தேவை.

❋ ஏழைகளுக்கான எளிய திருச்சபை (லூக் 4:16-22) தேவை. ஏழைகள் மீது இரக்கப்பட்டு அவர்களுக்கு உதவி செய்யும் நல்ல அரசியல்வாதிகள் தேவை.

❋ வீடு இல்லாதவர்களுக்கு வீடுகள் தேவை. போதைப் பொருள்களுக்கு அடிமையானாவர்களுக்கு விடுதலை தேவை. வெளிநாட்டு - உள்நாட்டு அகதிகளுக்கு பாதுகாப்பு தேவை. இடம் பெயர்ந்தவர்களுக்கு இடம் தேவை. முதியோருக்கு பாசம் தேவை. சமுதாயத்தால் பாதிக்கப்பட்ட புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு தேவை. பிறக்கும் முன்பே கொலை செய்யப்படும் குழந்தைகளுக்கு மதிப்பும், மரியாதையும் தேவை.

9. ***இன்றையத் திருச்சபை எப்படி இருக்க வேண்டும்.***

❋ காயங்களைத் குணமாக்கும் திருச்ச பையாக இருக்க வேண்டும். நம்பிக்கையைத் தூண்டியெழுப்பும் திருச்சபையாக இருக்க வேண்டும்.

❋ இயேசு உங்களை விடுவிக்கின்றார்" என்று எடுத்துரைப்பது திருச்சபையின் முதல் பணியாக இருக்க வேண்டும்.

❋ கருணை நிறைந்த திருச்சபையாக இருக்க வேண்டும். தொலைந்துபோனவர்களைத் தேடி கண்டு பிடிக்கும், காப்பாற்றும் திருச்சபையாக இருக்க வேண்டும். திருச்சபைக்கு வெளியே சென்றவர்கள் புரிந்துகொள்ளப்பட்டு, மதிக்கப்பட்டு உள்ளே கொண்டுவரப்பட வேண்டும். ஆயர்கள், ஆடுகளை அரவணைத்துப் பாதுகாத்து, அவற்றிற்குப் புதிய மேய்ச்சல் நிலங்களைக் காண்பிக்க வேண்டும்

# திருச்சபையில் 20 புதிய கர்தினால்கள் அறிவிப்பு






தை மாதம் 05,2015 அன்று 80 வயதிற்கும் மேற்பட்ட ஐவர் உட்பட 20 பேரை புதிய கர்தினால்களாக திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். நிர்வாகப் பணிகளில் தற்போதிருக்கும் 15 புதிய கர்தினால்களும் 14 நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும், அனைத்துக் கண்டங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது. என்றும் தெரிவித்தார். திருப்பீட சமூகத் தொடர்பாளர் அருட்தந்தை ஃபெத்ரிக்கோ லொம்பார்த்தி. இந்த 15 கர்தினால்களுள் 5 பேர் ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்கண்டம் மற்றும் ஆசியாவிலிருந்தும் மூவர் வீதமும் ஆபிரிக்கா மற்றும் ஓசியானியாவிலிருந்து இருவர் வீதமும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது கர்தினால்களாக அறிவிக்கப்பட்டுள்ள டோங்கா பேராயர் Soane patita paini Mafi அவர்களே, 53 வயதல் மிகக் குறைந்த வயதுடைவர். இவர்களின் அதி வயதுடையவர் Manizalesd ஓய்வுபெற்ற பேராயரும், 95 வயது நிரம்பியவருமான Jose de Jesus Pimiento Rodrqua ஆவார். இவர்களுடன் சேர்த்து 20 கர்தினால்கள் திருத்தந்தையால் கர்தினால்களாக திருச்சபையின் பணிக்காக தெரிவு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 3ம் பக்கத் தொடர்ச்சி.... இலங்கை வந்தடைந்த திருத்தந்தை சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஆற்றிய உரை...

பழைமையானதாகவோ அல்லது புதிதாகவோ ஏற்பட்டிருக்கும் வேற்றுமைகளை நிவர்த்தி செய்ய முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டிருப்பதன் மூலம் இன மற்றும் மத ரீதியான வன்முறைகள் உருவாகி இருக்கின்றது. பல ஆண்டு காலமாக இலங்கை உள்நாட்டுப் போரின் கொடூரத்தை அனுபவித்துள்ளது. சமாதானத்தை கட்டியெழுப்ப முயலும் இக்காலகட்டத்தில் பல்லாண்டு காலமாக ஏற்பட்ட வடுக்களை ஆற்றுப்படுத்தும் பணியிலே ஈடுபட்டுவருகின்றது. முரண்பாடுகளின் மூலம் ஏற்படும் அநீதிகள், அவநம்பிக்கை மற்றும் எதிர்ப்புக்களை அகற்றுவதோ அல்லது அதன் கசப்பான தன்மையை அகற்றுவதோ அவ்வளவு சுலபமான விடயமல்ல. இதற்கென நாம் நல்லதையே நினைக்க வேண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும். தீமையை நன்மையால் மேற்கொள்ள வேண்டும். (காண்க. உரோ 12:21) சமூக ஒற்றுமை ஒப்புரவு மற்றும் சமாதானம் ஏற்படுத்தக்கூடிய நற்பண்புகளையும் விழுமியங்களையும் விதைப்பதன் மூலமே ஆகும்.

குாயங்களை ஆற்றும் செயற்பாட்டின்போது உண்மையை நோக்கிய பயணத்தில் ஈடுபடவேண்டும். இது பழைய காயங்களை திரும்பவும் திறப்பதற்காக அல்ல மாறாக நீதியை, ஆற்றுப்படுத்தலை, ஒற்றுமையை வளர்த்தெடுக்க இது மிகவும் முக்கியமாகிறது.

அன்பார்ந்த நண்பர்களே, இம்மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முயற்சிகள், எடுக்கப்பட்டுவரும் சமூக நீதி மற்றும் ஒப்புரவு செயல்பாடும் மீளக்கட்டுமானப் பணிகளிலும் பலதரப்பட்ட சமய சம்பிரதாயங்களின் தேவை இருப்பதாக நான் கருதுகின்றேன். இம்முயற்சிகள் வெற்றியளிக்கப்படவேண்டுமாயின் சமூக வாழ் மக்கள் அனைவரும் ஒருமித்து செய்றபடவேண்டும். தமது அபிலாசைகளை, தேவைகளை, எதிர்பார்ப்புக்களை அத்தோடு தமது உள்ளத்தில் உள்ள பீதியை முன்வைப்பதற்கும் சுதந்திரம் அனைவருக்கும் இருக்கவேண்டும். மிகவும் முக்கியம் வாய்ந்தது என்னவெனில் ஒருவரை ஒருவர் நேசித்து ஏற்றுக் கொள்ளவும் சட்டபூர்வமான வேற்றுமைகளை மதிக்கவும் ஒரே குடும்பமாக வாழ்வதற்கு கற்றுக்கொள்ளவும் தயார் நிலையில் இருப்பதே ஆகும். மக்கள் தாழ்ச்சியுடன், திறந்த மனதுடன் மற்றவர்களுக்கு செவிமடுக்கும்போது பொதுவாக மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளக்கூடிய விழுமியங்கள் வெளிப்படும் வேற்றுமைகளை அச்சுறுத்தலாக கருதுவதை விட்டு அது சமூக அபிவிருத்தியின் வழிமுறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதியினை, ஒப்புரவினை மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அத்திவாரமாக இவை மாறுகின்றது. ஆகையால் மீள்கட்டுமாணப்பணிகளின் போது உள்ளடக்கப்படவேண்டிய முக்கியமான விடயமாக அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதும், கட்டுமாணப் பணிகளை நிவர்த்தி செய்வதும் மாத்திரமல்ல மனித மாண்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி அனைவரது அபிலாசைகளும் பூர்த்தியாகும் நிலையில் செயல்படுவது அவசியமாகும். இலங்கையின் அரசியல், கலாச்சார மற்றும் சமய தலைவர்கள் தமது அனைத்து முக்கியமான கடமைகளையும், செயற்பாடுகளையும் உற்றுநோக்குவதன் மூலம் பெறப்படும் நன்மை மற்றும் ஆற்றுப்படுத்தலின் ஊடாக இலங்கை வாழ் மக்களின் உலக மற்றும் ஆன்மீக வாழ்வு மட்டில் வளர்ச்சி நோக்கிய திடமான பங்களிப்பை பெற்றுக்கொடுப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

மேதகு ஜனாதிபதி அவர்களே, உறவுகளே நீங்கள் எனக்களித்த அதி உன்னத வரவேற்பினையிட்டு மீண்டும் ஓர் தடவை நன்றி கூறுவதுடன் நாம் இணைந்துகளிக்கவிருக்கும் இந்நாட்கள் சகோதரத்துவத்திலும், கலந்துரையாடலிலும், ஒப்புறவிலினதும் பகிர்தலினதும் நாட்களாக மாற உளமாற வாழ்த்துகின்றேன். இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் திருநாட்டிற்கு இறையாசி கிட்டவேண்டும். மேலும் அனைவரும் அமைதியும் சுபீட்சமும் பெறுவதின் ஊடாக அதன் ஒளி எங்கும் பரவிட நான் செபித்து நிற்கின்றேன்.

## 1ம் பக்கத் தொடர்ச்சி.... இலங்கை நாட்டின் நீதிக்கும் அமைதிக்கும்... புனிதர் பட்ட திருப்பலியில திருத்தந்தை ஆற்றிய மறைஉரை...

தனது வார்த்தைகளினாலும், மிகப்பிரதானமாக தனது வாழ்வின் முன்னுதாரணத்தாலும் இந்நாட்டு மக்களை "வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப்பேற்றையும்" (தி.ப 20:32) தரவல்ல விசுவாச வாழ்விற்கு இட்டுச்சென்றார்.

புனிதர் யோசவ்வாஸ் அவர்களில் இலங்கை மக்களுக்கான நன்மைத்தனமும், அன்பும் நிறைந்த கடவுளின் அதிசக்தி மிக்க அடையாளத்தைக் காண்கிறோம். அத்தோடு கடவுளின் வழிகளில் நிலைத்து நிற்பதற்கும், புனிதத்துவத்தில் வளர்வதற்கும், அவர் தன் வாழ்வை முற்றுமுழுதாக அர்ப்பணித்து ஒப்புரவு என்னும் நற்செய்தியின் அழைப்பிற்கு சான்றுபகரவும் புனிதர் யோசவ்வாஸ் அவர்கள் சவால்விடுக்கின்றார். இந்தியாவின் கோவா நகரைப் பிறப்பிடமாகக் கொண்டு "ஒறற்ரோறியன்" சபையைச் சார்ந்திருந்த புனிதர் யோசவ்வாஸ் அவர்கள் இந்நாட்டுக்கு மறைபரப்பு ஆர்வத்தாலும் இந்நாட்டு மக்கள் மீது கொண்ட அன்பாலும் தூண்டப்பட்டு வந்து சேர்ந்தார். மதக்கலாபனைகள் நிலவியதால் ஏழைபோல உடைகள் அணிந்து கூடுதலாக இரவில் தனது குருத்துவக் கடமைகளை இறைமக்களுக்காக மறைவான கூடுமிடங்களில் நிறைவேற்றினார். அவரது முயற்சிகள் கலாபனைக்குட்படுத்தப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு ஆன்மீக மற்றும் உள சக்தியைக் கொடுத்தன. நோயுற்றவர்களுக்கும் துன்பட்டவர்களுக்கும் பணியாற்றுவதில் புனிதர் யோசவ்வாஸ் அதிக அக்கறை காட்டினார். கண்டியில் அம்மை பரவிய காலத்தில் நோயாளிகளுக்கு அவர் ஆற்றிய சேவை கண்டி மன்னனால் புகழப்பட்டு பின்னர் அங்கே மறைப்பணி ஆற்றுவதற்கு அதிக சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தது. கண்டியை மையமாகக் கொண்டு இத்தீவின் ஏனைய பகுதிகளுக்கு தனது பணியை விரிவடையச் செய்தார். மறைபரப்புப் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டு மிகவும் களைப்படைந்து தனது 59வது வயதில் இறைபதம் அடைந்த இவர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவது தகுதியானதே. புனித யோசப்வாஸ் அடிகளார் பல காரணங்களை முன்னிட்டு, ஒரு எடுத்துக்காட்டாகவும், ஓர் ஆசானாகவும் தொடர்கிறார். ஆனால், நான் அதன் மூன்று விடயங்களை அவதானிப்புக்குட்படுத்த விரும்புகின்றேன்.

முதலாவதாக அவர் ஒரு முன்மாதிரிகையான குருவானவராக திகழ்ந்தார். இங்கு இன்றைய தினத்திலே யோசப்வாஸைப் போன்றே கடவுளுக்கும், அயலவர்களுக்கும் சேவையாற்ற தம்மை அர்ப்பணித்த பெருமளவான குருக்களும், துறவியர்களும், ஆண்களும், பெண்களுமாக எம்மோடு இருக்கின்றனர். உங்கள் ஒவ்வொருவரையும் புனித யோசப்வாஸ் அடிகளாரை உங்கள் வழிகாட்டியாக நோக்குமாறு பரிந்துரைக்கின்றேன். அவர் எல்லா எல்லைகளுக்கும் அப்பாற் சென்று இயேசுவை அறியவும், அன்பு செய்யவும் எங்களுக்கு கற்பிக்கின்றார். அவர் நற்செய்தியின் நிமித்தம் பொறுமையாக துன்பங்களை சகித்துக் கொள்வதிலும், நமது மேற்படியில் இருப்பவர்களுக்கு கீழ்ப்படிவிலும், திருச்சபையின் நிமித்தமான அன்பின் கரிசனையிதும் முன்மாதிரிகையாகவும் திகழ்ந்தார். (தி.ப. 20:28) எங்களைப் போலவே, புனித யோசப்வாஸ் அவர்களும் மாற்றங்கள் துரிதமாக ஏற்படுகின்றதோர் காலகட்டத்திலே வாழ்ந்தார். கத்தோலிககர்கள் சிறுபான்மையினராகவும், தங்களுக்குள்ளே பிளவுபட்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுக்குள்ளே பகைமை உணர்வு இருந்தது. உள்ளேயும், வெளியேயும் நிறைந்த கலாபனைகள் இருந்தன. இருந்தபோதிலும் புனித யோசப்வாஸ் அவர்கள் சிலுவையில் அறையுண்ட இயேசுவை நோக்கி செபத்தில் தொடர்ச்சியாக இணைந்திருந்தார். எல்லா மக்களுக்கும் கடவுளினதும், இரக்கத்தினதும், ஒப்புரவாக்கும் அன்பினதும் அடையாளமாக இருந்தார்.

இரண்டாவதாக புனித யோசப்வாஸ் அவர்கள் அமைதி நோக்கிய பணியில் சமயப் பிரிவினைகளை தாண்டிச் செல்வதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றார். அவரது இறைவன்பால் கொண்ட பிளவுபடாத அன்பு அயலவர்களை நோக்கிய அன்பிற்கு அவரை திறந்து விட்டது. தேவையில் உள்ள எல்லாருக்கும் அவர்கள் யாராக எவ்விடத்தவராக இருந்தாலும் அவர் பணிபுரிந்தார். அவரது முன்னூதாரணங்கள் இலங்கை திருச்சபையை தொடர்ந்து ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றன. இலங்கை திருச்சபைத் தாயானவள் மகிழ்வுடனும் தாராளமாகவும், சமூகத்தின் எல்லா அங்கத்தவர்களுக்கும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றாள். தனது சேவைகளை வழங்குவதில் சமய, இன, சாதி, சமூகநிலை, நம்பிக்கை போன்ற வேறுபாடுகளைக் கண்ணோக்காது எல்லோருக்கும் கல்வி, மருத்துவ மற்றும் இரக்கப்பணிகளை ஆற்றி வருகின்றாள். அவள் பதிலாக வேண்டுகோள் விடுப்பது எல்லாம் இப்பணிகளை ஆற்றுவதற்குரிய சுதந்திரத்தையே. சமய சுதந்திரம் என்பது அடிப்படையான மனித உரிமையாகும். ஒவ்வொரு தனிநபரும் தனிப்பட்ட முறையிலேயோ அல்லது மற்றவர்களுடைய உறவு முறையிலேயோ உண்மையை அறிவதற்கும், பகிரங்கமாக தமது சமய நம்பிக்கைகளை அறிக்கையிடுவதற்கும் அச்சுறுத்தலோ அல்லது வெளியே இருந்து வருகின்ற அழுத்தங்களோ இன்றி வாழ சுதந்திரமுடையவர். புனித யோசவ்வாஸ் அவர்களுடைய வாழ்வு கற்பிப்பதைப் போன்று உண்மையான இறைவழிபாடு என்பது பிரிவினைகள், வெறுப்பு, வன்முறை ஆகியவற்றை விளைவாக கொடுக்காது. மாறாக, வாழ்வின் புனிதத் தன்மையையும் மற்றவர்களினுடைய சுதந்திரத்தையும், மாண்பையும் மதிப்பதையும் அனைவருடைய நல்வாழ்வுக்காக அன்புடன் அர்ப்பணம் செய்வதையும் விளைவாகக் கொடுக்கும்.

இறுதியாக புனித யோசவ்வாஸ் அவர்கள் மறைபரப்பு ஆவல் என்பதன் முன்னூதராணமாத் திகழ்கின்றார். அவர் இலங்கைக்கு கத்தோலிக்க மக்களுக்கு பணியாற்ற வந்தபோதிலும் அவரது நற்செய்தி பிறரன்புப் பணி எல்லா மக்களையும் சென்றடைந்தது. தனது வீட்டை, குடும்பத்தை, வசதியான பழக்கப்பட்ட சூழல்களை விட்டு நீங்கி இயேசுவைப் பற்றி அறிவிப்பதற்காக எங்கெல்லாம் போகவேண்டும் என்ற அழைப்பிற்கு செவிமடுத்தார். புனித யோசவ்வாஸ் அவர்கள் பல் மத சூழலில் உண்மையும் அழகும் நிறைந்த நற்செய்தி விழுமியங்களை எப்படிக் கொடுப்பது என்று அறிந்திருந்தார். இதனை மனித மாண்போடும், அர்ப்பணத்தோடும், விடாமுயற்சியோடும், மிக்க தாழ்மையோடும் கொண்டு நடத்தினார். இதேவழிகள் தான் இன்று இயேசுவை பின்பற்றுபவர்களுக்கும் உரிய வழியாகும். அவரது இதே மறைபரப்பு ஆவலோடும் துணிவோடும் நாமும் எல்லா இடங்களுக்கும் செல்ல அழைக்கப்படுகின்றோம். அத்துடன் உணர்வுபூர்வமாகவும் மற்றவர்களை மதிப்பதன் மூலமாகவும், அவர் பகிர்ந்த அருளின் வாக்கை எல்லாருக்கும் கொடுக்கின்ற ஆவலோடும் செல்ல அழைக்கப்படுகின்றோம். இது அவர்களை கட்டியெழுப்பும் வல்லமையுடையது. (தி.ப 20:32) நாங்கள் மறைபரப்பின் திருத்தூதர்களாக மாற அழைக்கப்பட்டுள்ளோம்.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, புனித யோசவ்வாஸ் அவர்களின் உதாரண வாழ்வைப் பின்பற்றி இந்நாட்டு கிறிஸ்தவர்களும் விசுவாசத்தில் உறுதிபெற்று இலங்கையில் அமைதிக்கும், நீதிக்கும், ஒப்புரவிற்கும் பாரிய பங்களிப்பை வழங்குபவர்களாக மாற வேண்டும் என்று ஆசிக்கின்றேன். உங்களிடம் இருந்து இறைமகன் எதிர்பார்ப்பது இதனைத்தான். புனித யோசவ்வாஸ் அவர்கள் உங்களுக்கு கற்பித்ததும் இதைத்தான். ஊலகெங்கும் பரவியிருக்கும் எமது திருச்சபையோடு இணைந்து புதியதோர் பாடலை பாடி அவரது மகிமையை உலகெங்கும் பரப்ப உங்களுக்கு வேண்டிய வரம் வேண்டி நீங்கள் அனைவரும் புதிய புனிதரிடம் கையளிக்கின்றேன். இறைவன் உன்னதர். எல்லாப் புகழும் அவருக்கே உகந்தது. (தி.பா 96:1-4) ஆமென்

# இலங்கை வாழ் அனைத்து சமய...

**அருளாளர் யோசேவ்வாஸ் புனிதர் பட்ட அளிக்கும் திருப்பலியில் பேராயர் ஆற்றிய உரையின் 4ம் பக்கத் தொடர்ச்சி**

இன்னும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இப்பயணம் கஷ்டமானது. உமது செபமும், ஆசீரும் அத்தோடே தந்தைக்குரிய உமது வழிநடத்துதலும் எமக்குத் தேவை. எப்போதும் எங்களுக்காக நீங்கள் செபிப்பதாக உறுதியளித்திருக்கிறீர்கள். அதற்காகவும் நாங்கள் நன்றி கூறுகின்றோம். எமது இந்தத் தேடலில் கனிவுடன் உதவுமாறு நாம் உங்களைக் கேட்டு நிற்கின்றோம். இதயங்களின் காயங்கள் உண்மையாவே குணம் பெறவேண்டும். பொருளற்ற வன்முறையை கட்டவிழ்த்துவிட்டதற்காக ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்கத் தேவையான பலமும் தேவை. துன்பகரமான கடந்த காலத்தை மன்னித்து மறந்து கொடுத்து வாங்கும் செயற்பாட்டினூடாக பிரச்சினையால் பாதிக்கப்பட்ட அனைவருக்குமிடையிலும் புரிந்துணர்விற்கான பாலங்கள் உருவாகவும் வேண்டும். நாம் இவ்விலக்கிலிருந்து வெகுதூரமாக இருக்கின்றோம். அவ்வாறான தடைகளைத் தாண்டக் கூடிய திருமறையின் உயர்வழிகளைக் கற்பிக்கும் உங்களது மேதகு பிரசன்னம், நாமும் ஒருவர் மற்றவருடன் உறவு கொள்ள உதவும் என்பதே எமது நம்பிக்கையும் வேண்டுதலுமாகும். எமது அன்புக்குரிய புனிதர் யோசவ்வாஸ் விண்ணகத்தில் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் படி வேண்டுதல் செய்வோம். அவருடைய பரிந்துரையால் அமைதி என்னும் புதுமை நமது நாட்டில் இடம்பெறவும், உண்மையான அபிவிருத்தி மற்றும் மகிழ்ச்சியை எமது வேற்றுமைகளுக்கு அப்பால் சென்று நாமெல்லாம் அடைந்திடவும் மன்றாடுவோம்.

திருத்தந்தையே, எமது நாடு மாபெரும் உலக மறைகளான பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகியவற்றை ஒரு சேரப்பெற்ற பேறுபெற்ற நாடாகும். இதனால் அமைதியை கொணரக் கூடிய அற மற்றும் ஆன்மீக சக்தி எங்களுக்கு இருக்கிறது. இதனால் உண்மையான நல்லிணக்கத்தையும் நம்பிக்கையையும் கொடுத்து என்றும் எப்போதும் நன்மையை நோக்கி உந்திச் செல்ல எம்மால் முடியும்.

திருத்தந்தையே, எமது இந்த தீர்மானத்தில் நிலைத்து நிற்கும்படி எம்மை ஆசீர்வதியும். நீங்கள் எம் மத்தியில் பிரசன்னமாயிருப்பதற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றோம். எமது அன்புக்குரிய அழகான இல்லிடமான இலங்கை மீதும் அதன் அனைத்து மக்கள் மீதும் உங்களது தந்தைக்குரிய அப்போஸ்தலிக்க ஆசீர்களை வழங்குமாறும் இரந்து நிற்கின்றோம். நன்றி!

## *திருத்தந்தையே உங்களின் வருகை...* திருத்தந்தையை வரவேற்ற

**நிகழ்வில் மேன்மைதங்கிய ஜனாதிபதி ஆற்றிய 1 ஆம் பக்க உரையின் தொடர்ச்சி**

பயணத்தினூடாக ஆசீர்களை பெறுவதற்கு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்திருக்கின்றீர்கள். இதற்கு முன்பதாக 20 ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரை எமது தாய்த்திரு நாட்டிற்கு வரவேற்பதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. அக்கால கட்டத்தில் எமது நாடு முழுமையாக பயங்கரவாத பிடியில் சிக்குண்டு கிடந்தது. அன்றாட வாழ்க்கையின் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் எமது மக்கள் அல்லோலப்பட்டனர். இருப்பினும் திருத்தந்தையே, நீங்கள் இம்மண்ணில் காலடி எடுத்து வைக்கும் போது சமாதானம் ஒப்புரவு நாட்டின் அனைத்து திசைகளுக்கும் பரப்பப்பட்டு அதன் விளைவுகளை அனுபவித்து மனித மாண்புடன் வாழக்கூடிய சூழல் எமது மக்களுக்கு கிட்டியுள்ளது. வறுமை கோட்டிலிருந்து மக்களை மீட்டெடுக்க இவ்விடயங்கள் அடிப்படையாக அமைந்துள்ளது எனக் கூறுவதில் ஐயமில்லை. ஏழ்மையை ஒழிப்பதற்காக எமது அரசாங்கம் முன்னுரிமையாக செயற்படுவதுடன் ஏழைகள் மத்தியில் காணப்படும் பொருளாதார வேற்றுமைகளை குறைப்பதற்கு திடசங்கர்ப்பம் கொண்டிருக்கிறோம்.

திருத்தந்தையே, இலங்கைக்கு கால்பதித்த உங்களுடைய இந்த அப்போஸ்தலிக்க விஜயம் முக்கிய விடயமாக நாம் கருதுவது என்னவெனில் எனது அரசு கலந்துரையாடல் மற்றும் ஒப்புரவு மக்கள் மத்தியில் நிலைகொள்ள சந்தர்ப்பம் அளித்து அமைதியினை, சமாதானத்தினை அனைத்து மக்களும் அனுபவிக்க செயற்பட முயற்சியெடுப்பதாலாகும். எமது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆன்மீகம் கலாச்சாரம் சமூக ஒருமிப்பு மற்றும் ஒப்புரவு தொடர்பில் நம்பிக்கை கொண்ட மக்களாக வாழ்ந்து வருகின்றோம். திருத்தந்தையே, உங்களுடைய உன்னத பங்களிப்பு சமாதானம் மற்றும் ஒப்புரவு எமது மக்கள் மத்தியில் மற்றும் உலக மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும். எமது நாட்டின் இவ்வழி செயற்பாடுகளுக்கு எமக்கு ஊக்கம் அளிக்கின்றது.

அதிவணக்கத்திற்குரிய திருத்தந்தையே, இலங்கையின் இப்பயணத்தின் போது இலங்கையின் முதலாவது புனிதராக முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரை திருநிலைப்படுத்துவது எமது நாட்டின் கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் மத்தியில் நம்பிக்கையையும் அவர்கள் எமது நாட்டின் திருச்சபையை கட்டியெழுப்ப ஆற்றிய அளப்பரிய சேவையை நினைவுகூர்வதாக அமையும். அவரைப் புனிதர் நிலைக்கு உயர்த்தும் சந்தர்ப்பம் முக்கியமாக இலங்கை வாழ் மக்களுக்கும் பிராந்தியத்தின் விசேடமாக கத்தோலிக்க மக்களுக்கும் வரலாற்று முக்கியத்துவம்மிக்கதாக அமையும்.

திருத்தந்தையே, எமது இரு நாடும் உலகில் முக்கிய சமயங்களான கிறிஸ்தவம் மற்றும் பௌத்த சமயத்தை கட்டிக் காப்பதற்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. திருவிவிலியத்தில் கூறியதுபோல இறைமகன் கிறிஸ்து இவ்வாறு எடுத்துரைத்தார். “பகைவரை நேசியுங்கள் துன்புறுத்துபவர்களுக்காக செபியுங்கள்” (மத் 5:44) அதுபோன்றே புத்தபெருமான் தனது போதனையில் எடுத்துரைப்பது கோபம் கோபத்தினால் தணியாது இருப்பினும் கோபத்தை அன்பினால் தணிய வைக்க முடியும். தீமையை நன்மையின் மூலமே கட்டுப்படுத்த முடியும் (தம்மபதம்) இவ்வாறான முடிவில்லாத போதனைகள் கிறிஸ்தவ மற்றும் பௌத்த விழுமியங்களாக பகிர்ந்து கொள்ளும் எனது நாட்டு மக்கள் கடைப்பிடிக்கும் சமயங்கள் இவை. இவை பல்சமய உரையாடலுக்கும், சமூக ஒற்றுமை மற்றும் ஐக்கியத்திற்கும் விசேடமான பங்களிப்பை நல்குகின்றன. இதையே கடந்த வார உலக சமாதான தின செய்தியில் நீங்கள் முன்வைத்துள்ளீர்கள்.

இலங்கை அரசு மற்றும் மக்கள் சார்பில் உங்களது இந்த அப்போஸ்தலிக்க விஜயம் பலன்தரக்கூடியதும் நினைவில் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஓர் விஜயமாக அமைந்திட உளமார பிரார்த்திக்கின்றேன். இலங்கை மற்றும் திருப்பீடத்திற்குமான இராஜதந்திர உறவுகளை மென்மேலும் பலபடுத்துவதற் ஏதுவான கலந்துரையாடல்கயையும், உறவையும் நாடி எதிர்காலத்தில் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்றேன். உங்களடைய முழுமையான ஆசிகளும், வழிகாட்டல்களும் இலங்கை நாட்டுக்கு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர் அனைவருக்கும் வழங்குமாறு தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றேன். எமது நாட்டின் அமைதி, சமாதானம், ஒப்புரவு மற்றும் சுபீட்சம் வேண்டி இறைவனிடம் மன்றாடும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

உங்களுக்கு எனது நன்றிகள்.

# உறவுகளே நீங்கள் எனக்களித்த....

**திருத்தந்தை அவர்கள் சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆற்றிய உரையின் தொடர்ச்சி (2ம் பக்கம்)**

இந்த பல்சமய உரையாடல்கள் மற்றும் கிறிஸ்தவ சமயங்களிடையிலான உறவின் பல்சமய உரையாடல் மற்றும் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான உறவுகளில் இவ்வாறான நேர்முறையான வளர்ச்சிகள் இலங்கையில் முக்கியத்துவம் றெுவதோடு காலத்தின் கட்டாயமுமாகின்றன. ஏனெனில் பல வருடங்களாக இந்நாட்டின் மக்கள் உள்நாட்டுப் பிரச்சினை மற்றும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்றைய தேவை என்னவெனில் ஆற்றுப்பதுத்தலும், ஒற்றுமையுமேயாகும். மேலதிக பிளவோ, பிரிவினையோ வல்ல. இந்நாட்டின் நன்மையை ஏன் முழு மனித குடும்பத்தின் நலநன விரும்பும் அனைவரினதும் அதிஉன்னத கடமைகளாகவே ஒற்றுமையை வளர்ப்பதும், காயங்களை ஆற்றுவதும் அமைகின்றன. இந்த பல்சமய உரையாடல்கள் மற்றும் கிறிஸ்தவ சமயங்களிடையிலான உறவின் போது எவரும் தமது அடையாளத்தை விட்டுவிட வேண்டியதில்லை. ஏவ்வினத்தவரும் சமயத்தவர்களும் ஒரே சகோதர சகோதரிகள் போல் ஐக்கியமாக வாழ்வதே அவசியமாகும்.

போது எவரும் தமது அடையாளத்தை விட்டுவிட உறவுகளே நீங்கள் எனக்களித்த வேண்டியதில்லை. ஏவ்வினத்தவரும் சமயத்தவர்களும் ஒரே சகோதர சகோதரிகள் போல் ஐக்கியமாக வாழ்வதே அவசியமாகும்.

வேறுபட்ட சமயங்களைச் சேர்ந்த மக்கள் அனைவருமே பல்வேறு வழிகளிலும் இப்பணியைச் செய்யமுன்வரலாம். சகோதரத்துவத்துடனான நட்புறவெனும் குணமாக்கும் மருந்தை போட பல வழிகளும் பல தேவைகளும் இருக்கின்றன. ஏழைகள், கைவிடப்பட்டோர் நம்பிக்கை மற்றும் மனநிம்மதியை தரும் வார்த்தைக்காக ஏங்குவோர்களினது பொருளாதார மற்றும் ஆன்மீகத் தேவைகளையும் குறித்து இந்நேரத்தில் நினைவுகூருகின்றேன். இவ்வேளையில் தங்கள் உடன்பிறப்புக்களை இழந்தோரின் குடும்பங்களையும் நினைவுகூருகின்றோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்நாட்டின் வரலாற்றில் நல்மனம் படைத்த எத்தனைபேர் இச்சமூகத்தின் ஒழுக்க அடிப்படைகளை கட்டியெழுப்ப முயலுகிறீர்கள்? வேறுபட்ட சமய குருக்களின் தலைவர்களுக்கிடையிலான கூட்டுறவின் வளர்ச்சியினூடாக இலங்கையின் சமூக மற்றும் நிறுவன அமைப்புகளில் ஒப்புரவை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். சுமாதானத்தின் பொருட்டு சம நம்பிக்கைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வன்முறையையும் போரையும் ஏற்படுத்த ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. யாராகிலும் வன்முறையை உருவாக்க எத்தனிக்கும் போது, நாம் அவர்களை ஆணித்தரமான முறையில் கண்டித்து எமது சமய விழுமியங்களின் படி அமைதியுடன் சமூக வாழ்வு வாழ அவர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.

ஆன்புக்குரிய நண்பர்களே, பெருந்தன்மையோடு என்னை வரவேற்று என்னோடு இந்நேரத்தை கழிபத்தற்கு உங்களுக்கு மீண்டும் நன்றி நவில்கின்றேன். எமது இந்த சகோதர சந்திப்பு ஐக்கியமாய் வாழவும், சமாதான ஆசீரை எங்கும் பரப்பவும் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிகளையும் பலப்படுத்துவதாக.

07ம் பக்கம் புனித பிரான்சிஸ்...

கருணைக் காட்டி புனிதரை தன் பக்கம் இழுத்துவிடலாம் என் நினைத்தான். புனிதருக்கு சிறிது இளைப்பாறுதல் கிடைத்தது. நொறுங்கிப்போன புனிதரின் உடலை தரிசிக்க விசுவாசிகள் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் ஒருவேளை பயந்து கிறிஸ்தவ வேதத்தை விட்டு விடலாம் என்று இந்த ஏற்பாடு. ஆனால் விசுவாசிகள் படை படையாக வந்து புனிதரின் திறந்த காயங்களை முத்தமிட்டனர்.

துணிகளை புனிதரின் இரத்தத்தில் தோய்த்து மரியாதையுடன் புனித பண்டமாக எடுத்துச் சென்றனர். 304 ஆம் ஆண்டு ஜனவரி 22 அன்று புனிதர் மரித்து விண்ணகத்தில் மறைசாட்சி முடிசூட்டப்பட்டார்.

புனிதரின் உடல் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் இரையாக சேற்று நிலத்தில் வீசப்பட்டது. ஆனால் புனிதரின் உடல் அற்புதமாக பாதுகாக்கப்பட்டது. பறவைகளையும் விலங்குகளையும் புனிதரின் உடல் அருகில் நெருங்க விடாமல் ஓர் அண்டங்காக்கா விரட்டியடித்துக் கொண்டிருந்தது.

ஆளுநர் ஆணையிட புனிதரின் உடலை ஒரு பையிலிட்டு அதைத் தைத்து கல்லுடன் சேர்த்துக் கட்டி கடலில் வீசினர். ஆனால் இரவில் கடல் அலைகள் புனிதரின் உடலைக் கரையில் கொண்டு சேர்த்தது.

பக்தி நிறைந்த ஒரு கைம்பெண் புனிதரின் உடலை மரியாதையுடன் எடுத்துச் சென்று நல்லடக்கம் செய்தார் என்று கூறப்படுகிறது. புனித அகுஸ்தினார் புனித வின்சென்ட் திருநாள்களில் புனிதரைப் பற்றி ஆற்றிய மறையுரைகளில் உச்சக்கட்ட சித்திரவதையில் விசுவாசத்தில் உறுதியாக இருந்த புனிதரைப் புகழ்ந்து பேசினார். உரோமைப் பேரரசின் எப்பகுதியிலும் இன்னும் இயேசுவை அறியும் எல்லா இடங்களிலும் புனித வின்சென்ட்டின் புகழ் பரவுகிறது என அகுஸ்தினார் போதித்ததால் புனிதரின் மேலுள்ள விசுவாசிகளின் பக்தி வேகமாகப் பரவியது. திருச்சபையில் மிகவும் புகழ்பெற்ற திருத்தொண்டனர் மூவரில் வின்சென்ட் ஒருவர். மற்ற இருவர் ஸ்தேவான் மற்றும் லாரன்ஸ் புனிதரின் திருநாள் இத்தாலி, ஸ்பெயின், போர்த்துக்கல் இங்கிலாந்து போன்ற நாடுகளில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.


# பொன்விழா காணும்



## அந்தோனி, புஸ்பம் தம்பதிகள்

**1965.01. 22 ~ 2015.01.22**

**“வாழ்வு தரும் ஊற்று உம்மிடமே உள்ளது உமது ஒளியால் யாமும் ஒளி பெறுகின்றோம்” (திபா 36:9)**

ஐம்பது வருட இணைப்பிரியா இவ்வாழ்க்கையைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறுவதுடன் மென்மேலும் பல ஆசிகளை தந்து உடல் நலமும், உள நலமும் சீராக இருக்க அருள் பொழிய வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

**மகன்மார், மருமகள்மார், மகள்மார், மருமகன்மார், பேரக்குழந்தைகள்**

(N 5535)

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின் நிகழ்வுகளில் சில...









படங்கள் : சாகர லக்மால் டிமெல் மற்றும் திலின அலகோன்

















அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்